Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01.07.2003) தொலைபேசி - 2223378 ஒலி 194

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து

# பாலாவின் தலைமையிலேயே சமாதானப் பேச்சு நடக்கும்!

## தெளிவுபடுத்துகிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எமக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் உள்ள விடயங்களை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.**

**இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவச் செயலகத்தில் நேற்று அரசியல்துறை பொறுப்பாளர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். இச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இச் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்ட கேள்வியையும் அதற்கு அவர் அளித்த பதிலையும் அப்படியே தருகிறோம்.

**கேள்வி:** ஜப்பான் தூதுவருடனான சந்திப்பில் என்ன விடயங்கள் முக்கியமாக பேசப்பட்டது?

**பதில்:** தற்போதைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாகவும் ஜப்பான் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் இன்றைய எமது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும் கூடுதலாக கேட்டார்கள். அவை குறித்தும் பேசினோம்.

**கேள்வி:** பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலையில் இச் சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது. பேச்சுவார்த்தை தொடரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறதா?

**பதில்:** சந்திப்பில் எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை விளக்கி இருந்தோம். ஜப்பான் மாநாடு அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் விளக்கி இருந்தோம். தமிழ் மக்களுடைய அவசர மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கான பரிந்துரைகளை, தீர்மானங்களை மாநாட்டில் எடுக்கவில்லை என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்டினோம். எதிர்காலத்தில் இன்றைய யதார்த்தத்தை கொண்டு இந்த சமாதான பேச்சுக்களை தொடர்வதாயின் தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய, தீர்க்கமான முடிபு அரசாங்கம் எடுக்க வேண்டும் என்பதை முக்கியமாக கடந்த பேச்சுக்களில் ஏற்பட்ட பின்னடைவு மக்களுடைய நம்பிக்கையீனங்களையும் உதாரணமாகக் கொண்டு எதிர்காலத்தில் முன்னேற்றகரமாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமாக இருந்தால் எமது மக்களின் அன்றாட அவசர பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய அதிகார கட்டமைப்பை நிறுவ வேண்டிய அவசியத்தை தூதருக்கு சுட்டிக்காட்டினோம். அவர்களும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படியான ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் தீர்க்கமாக எடுக்கும் போது மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கக்கூடிய சூழல் உருவாகும் என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

**கேள்வி:** யப்பான் தூதுவருடனான சந்திப்பில் சாதகமான பதில் கிடைத்திருக்கிறதா?

**பதில்:** யப்பான் தூதுவர் தங்களுடைய எதிர்பார்ப்புக்களையும் சர்வதேச சமூகங்களின் எதிர்பார்ப்புக்களையும் சுட்டிக் காட்டினார். முடிபுகள் என்கின்ற பொழுது அரசாங்கத்தின் பக்கம்தான் முடிபு இருக்கிறது. எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருக்கின்றோம். அதை அவர்களும் புரிந்திருக்கின்றார்கள். அதில் ஒன்றைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம். தென்னிலங்கையிலிருக்கின்ற அரசியல் முரண்பாடுகள் குறிப்பாக, ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரியின் தலைமையிலிருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகள் எமது

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதான பேச்சுவார்த்தை மீண்டும் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பம்?

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை இம்மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமாகலாமென அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாகவே ஜப்பான் மற்றும் நோர்வே நாட்டு விசேட பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து இது பற்றி பேசி வருவதாகவும் அவர்களை எப்படியாவது மீண்டும் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்வதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த வாரம் லண்டன் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான குழுவினர் நாடு திரும்பியதும் சமாதான முன்னெடுப்புக்களின் அடுத்த கட்ட நகர்வு இடம்பெறும் என சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலகா அறிவித்திருந்தார்.

அதற்கமைய பிரதமர் நேற்று

(10ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினத்தை கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகளின் நினைவு நாளை ஒரு எழுச்சி நிகழ்வாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள், தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன.

எதிர்வரும் 5ம் திகதி கரும்புலிகள் நினைவு நாள். இதனை ஒட்டி யாழ். மாவட்டத்தில் எழுச்சி நிகழ்விற்கு பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கரும்புலிகள் நினைவு நாள் ஏற்பாட்டுக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வலிகாமம் கோட்ட நிகழ்வுகள் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இதற்கென சிறப்பாக அமைக்கப்படவுள்ள மாவீரர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வாழைச்சேனையிலும் அம்பாறை ஆலையடிவேம்பிலும் நிகழ்விற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

(இ)

## கனேடியத் தூதுவர் நாளை வன்னி செல்வார்

(கொழும்பு)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் நாளை புதன்கிழமை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் நிலை மற்றும் சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதில் உள்ள தடங்கல்கள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயவுள்ளனர்.

(த)

## சு.ப. தமிழ்ச்செல்வனுடன் ஜப்பான் தூதுவர் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகா தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலணி மண்டபத்தில் சுமார் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்றது.

இப் பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்களின் தேவைகள் குறித்தும் அவர்களது இயல்பு வாழ்க்கை குறித்தும் அவை விரைவாகச் செய்து முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் நாம் ஜப்பானியத் தூதுவரிடம் வலியுறுத்தி கூறியுள்ளோம் என்று அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார்.

இதேவேளை ஜப்பானியத் தூதுவர் டோக்கியோ மாநாடு குறித்தும் சர்வதேசத்தின் நிலைப்பாடு குறித்தும் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் எடுத்து விளக்கியுள்ளார்.

(வ)



ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகாவை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தலையிடவேண்டும்

### பி.பி.ஸிக்கு டக்ளஸ் பேட்டி

(லண்டன்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணும்பொருட்டும் விடுதலைப்புலிகள் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ள அரசியல் கட்சி உறுப்பினர்களை படுகொலை செய்வதை தடுத்து நிறுத்தும் வகையிலும் இந்தியா இலங்கைப் பிரச்சினையில் தலையிட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் இந்திய மத்திய அரசின் முக்கிய அமைச்சர்களையும், எதிர்க்கட்சி பிரமுகர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக நேற்று லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உலக இந்துமாநாட்டை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்திய கலாசாரப் பெருவிழாவில் தமிழக நாட்டியத் தாரகைகள் வழங்கிய நடனக் காட்சியை இங்கு காணலாம்.


# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு 8 நபர் செல்லும் லிப்ட் வழங்கி பொருத்தி இணைப்பதற்கு 2003.7.17ஆம் திகதி மு.ப.10 மணிக்கு கட்டடங்கள் திணைக்கள கேள்விச்சபைத் தலைவரினால் பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.
2. கீழே பந்தி 8ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து 2003.07.11 ஆம் திகதி பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமான ரூபா (1000/=) ஆயிரம் மட்டும் செலுத்தி கேள்விப் பத்திரங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டவுடன் பத்தர முல்ல செத்சிறிபாய 2வது மாடியில் கட்டடங்கள் திணைக்கள ஒப்பந்தங்கள் கிளையில் திறக்கப்படும். அவ்வமையம் கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. லிப்ட்கள் வழங்கிப்பொருத்துவதற்கு செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச்சான்றிதழைப் பெற்ற மற்றும் லிப்ட்கள் வழங்கிப்பொருத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற முகவர்களாக 10 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் செயற்படுகின்ற அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்களைக் கொள்வனவு செய்ய முன்னர் ஆவணச்சான்றொன்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் வந்து கேள்வி மூடப்படும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர் கேள்விச்சபை, கட்டடங்கள் திணைக்களம், செத்சிறிபாய ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டே பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
6. தாமதித்துக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகின்றனர். அத்துடன் பாதுகாப்புச் சோதனை நிமித்தம் குறைந்த பட்சம் 01 மணித்தியாலத்திற்கு முன்னர் "செத்சிறிபாய" வளவை வந்தடைய வேண்டும்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். மேலதிக விபரங்கள் கொழும்பு- 7 டொரிங்டன் அவனியூ, இல.213, கட்டடங்கள் திணைக்களம் பிரதம பொறியியலாளர் (கொழும்பு நிர்மாணம்) இடமிருந்து அல்லது யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களப்பிரதம பொறியியலாளரிடம் (யாழ்ப்பாணம்) பெற்றுக்கொள்ளலாம்.
8. கேள்வி ஆவணங்கள் கொள்வனவு செய்வதற்கான பிரதம பொறியியலாளர் அலுவலகங்களின் முகவரிகள்

(1) பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்),
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி : 021 2222781

(2) பிரதம பொறியியலாளர் (கொழும்பு)
நிர்மாணம் கட்டடங்கள் திணைக்களம்
இல. 223, டொரிங்டன் அவெனியூ
கொழும்பு -7,
தொலைபேசி-55469,

ஏ.஡.விக்கிரமசிங்க,
கட்டடங்கள் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம்
"செத்சிறி பாய"
ஜெயவர்த்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல.


# சிறுநீர் கழிப்பதில் குழந்தைகளுக்கு ஏற்படும் கோளாறுகளை எவ்வாறு திருத்தலாம்?

குழந்தைகள் இரவில் தன்னிச்சையாக சிறுநீர்கழிக்கும் பழக்கம், பிறந்த ஒரு மாதத்திலிருந்து நான்கு வயதுவரை பெரும்பாலும் இருக்கும். சிலசமயம் 18வயது வரைகூட நீடிக்கக்கூடும்., இது பொதுவாக தானாகவே சரியாகி விடுவதுண்டு. ஒருசில குழந்தைகளுக்கு இடையில் சரியாகி மீண்டும் இரவில் படுக்கையில் சிறுநீர் கழிப்பதுண்டு. ரொம்பவும் அரிதாக சிலருக்கு பகலிலும் தானாகவே சிறுநீர் வெளியேறுவதுண்டு. இதற்கு சிறுநீர்ப் பையிலுள்ள தசைநார்கள் வலுவற்று இருப்பதனாலும் ஏற்படலாம்.

இப்பழக்கம் பெண்களிடையே

## மருத்துவ விளக்கம்

அதிகமாக்க காணப்படுகிற ஒன்று. வாழ்நாள் முழுவதும் தொல்லை தரும் சிறுநீர்ப்பையின் குறைந்த கொள்அளவு, சிறுநீர்ப்பை அழற்சி போன்றவை முக்கிய காரணங்களாகும். ஆனால் இதை ஒரு நோயாக எடுத்துக்கொள்ளக் கூடாது. சிறுநீர்ப் பையை அடக்கி ஆளும் முறையில் உள்ள மாறுபாடு என்றே கருத வேண்டும். சாதாரணமாக இம்மாறுபாட்டினால் குழந்தைகள் மனநிலையில் நலமாகவே இருப்பார்கள். ஆனால் பெற்றோர்கள் அதிக கவலையுடன் இருப்பார்கள்.

சிறுநீர்ப்பாதை நோய்கள், இரவுக்கனவுகள், மனப்போராட்டங்கள், மனக் கிளர்ச்சி, நீரிழிவு நோய், மூளைச்சிதைவு நோய்கள் போன்றவைகளும் காரணமாகக்கூடும்.

இப்பழக்கம் தானாகவே ஆறு வயதுக்குப் பின்னர் ஒவ்வோர் ஆண்டும் பதினைந்து விழுக்காடு குணமடையும். இது தவிர ஊக்குவிப்பு அறிவுரைகளால் 25விழுக்காடும், சிறுநீர்ப்பை பயிற்சிகளால் 35விழுக்காடும், இரவுச் சிறுநீர்க் கூக்குரல் மணியால் 75 விழுக்காடும், மருந்துகளால் 25விழுக்காடு குணமாகும்.

### ஊக்குவித்தல்

ஊககுவிப்பு அறிவுரைகளுடன் மருந்துகளும் அவசியம். அதாவது மருத்துவர் மருத்துவம் அளிக்கும் பொழுது மருத்துவரும் பெற்றோரும். குழந்தையிடம் இரவில் சிறுநீர் கழித்தல் பக்குவமடையாத சிறுநீர்பை அல்லது சிறிய சிறுநீர் பையால்தான் ஏற்பட்டுள்ளது என்று கூறி அவர்களின் குற்ற உணர்வைப் போக்கவேண்டும். மேலும் அப்பழக்கம் வேண்டுமென்றே செய்யக்கூடிய பழக்கம் இல்லை என்றும் கூறி, இது தானாகவே குணமாகக் கூடிய ஒன்று என்று உறுதிஅளிப்பது வெற்றிக்கு உதவும். இவ்வறிவுரைகள் நான்கு வயதிலிருந்து ஆறு வயதிற்குள் மிகுந்த பலனளிக்கும்.

இக்குழந்தைகளுக்கு தூங்குவதற்கு மூன்று மணிநேரத்திற்கு முன்பிலிருந்து நீரும், நீராகாரங்களும் கொடுக்கக்கூடாது. இரவு தூங்குவதற்குமுன்னர் குழந்தைகளைச் சிறுநீர் கழிக்க அனுப்புதல் வேண்டும்.



இரவில் சிறுநீர் கழிக்காத நாட்களில் குழந்தையைப் பாராட்டிப் புகழ வேண்டும். [illegible] கூட துணை புரியும். ஆனால் அதே சமயம் சிறு நீர்கழித்த இரவுகளுக்கு தண்டனை என்பதை கனவிலும் நினைக்கக் கூடாது ஏனெனில் இம்முறை வெற்றியடைவதற்கு சில காலங்கள் பிடிக்கும். அதன் பின்னர் பயனும், முடிவும் நன்றாக அமைந்து மீண்டும் ஏற்படுவதையும் குறைக்கும்.

### சிறுநீர்ப்பை பயிற்சிகள்

சிறுநீர்ப்பையினை நன்கு விரிவடைய நல்ல பயிற்சி யாகும்.பகல்

## தாய்மார்களுக்கு சில யோசனைகள்

வேணி

குழந்தை எவ்வளவுநேரம் சிறுநீர் கழிக்காமல் தாங்கிக் கொள்ள முடிகிறதோ அவ்வளவு நேரம் தாங்கிக் கொள்ளுமாறு பழக்கவேண்டும். சிறுநீர்ப்பை நிரம்பியதை உணர்ந்த உடனே சிறுநீர் கழிப்பதை தள்ளிப்போட்டு பையை விரிவாக்க உதவவேண்டும். இதனை குழந்தையிடமே ஒரு குடுவையில் ஆரம்பத்தில் சிறுநீர்க் கழிக்கச் செய்து ஒவ்வொருமுறையும் அதன் அளவு கூடுதலாக்க முயற்சி எடுக்க சொல்லிக்கொடுக்க வேண்டும். இதை பகலில் பழகிக் கொள்ளுதல் மிகச் சிறந்தது. குழந்தைப் பருவத்தில் சிறுநீர்ப் பையின் கொள்திறன் ஒவ்வோர் ஆண்டும் 30லிருந்து 45மி.லி ஆகும். (எ.கா) நான்குவயது குழந்தையின் கொள்ளளவு 120லிருந்து 180மி.லி. ஆகும் பெரியவர்களின் கொள்ளளவு அதிகபட்சம் 600மி.லி.ஆகும். ஆகவே நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இரவில் படுக்கையை நனைப்பது ஓர் இயற்கை மாறுபாடே. நான்கு வயதிற்கு மேலும் இப்பழக்கம் தொடர்ந்தால் மருத்துவ உதவி பெறுவது அவசியம். இப்பயிற்சியை பொதுவாக எட்டு வயது வரை கொடுப்பது நல்லது.

சிலசமயம் சிறுநீர்ப்பைக் கொள்திறன் உள்ள குழந்தைகளுக்கு இப்பழக்கம் இருப்பின் அவர்களுக்கு சிறுநீரோட்டத்தடைப் பயிற்சிகளைப் பகலில் கற்பிக்க வேண்டும்.

அதிகமான அளவு நீர்மங்களை காலை நேரங்களில் அளிப்பது சிறுநீர்ப் பையின் கொள்ளளவை அதிகப்படுத்தும். அதிகப்படியான சிறுநீர் உற்பத்தியாதல் குழந்தைகளுக்குச் சிறுநீர்ப்பையினை விரிவாக்கும். பயிற்சியையும் சிறுநீரோட்டத்தடைப் பயிற்சியினையும் செயல்படுத்த அதிக வாய்ப்பை அளிக்கும். திரவங்கள் கொடுப்பதை மதிய வேளையிலிருந்தே குறைத்துக் கொள்ளவேண்டும்.

### இரவு சிறுநீர்கூக்குரல் மணிகள்

புதுமையான இரவுச் சிறுநீர்க் கூக்குரல் மணிகள் மேலை நாடுகளில் உள்ளது. இரவு நேரத்தில் குழந்தைக்கு சிறுநீர் வரும்போது குழந்தையை இவை தூக்கத்திலிருந்து எழுப்பிவிடும். இவைகளை உள்ளாடைகளில் இணைத்துவிடலாம். இவை சிறிய சிறுநீர்ப்பையினை விரிவாக்கும். பயிற்சியினைக் கடைப்பித்து வரும் குழந்தைகளுக்கும் மிகவும் பயன்படும்.இம்முறை எட்டுவயதிற்கு மேல் உதவும். இது போல இவ்வயதில் மருத்துவ முறைகளும் அவசியம்.

மேற்கூறிய முறைகளைவிட சிறந்தமுறை, சிறந்த நண்பன் ஒரு குழந்தைக்கு அக்குழந்தையே. தானாக மனதில் நிறுத்திக் கொள்ளும் எண்ணம் மிகவும் சிறந்தது. குழந்தை தூங்கப் போகுமுன் சிறுநீர் கழிக்க சிறுநீர் கழிக்குமிடம் செல்ல வேண்டும் என நினைவூட்டிக் கொள்ள வேண்டும். தானே ஏற்படுத்திக் கொள்ளும் மன இணக்க முறை நாள் தோறும் இரவு நேரங்களில் ஐந்து வயதிற்கு மேலுள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ளதாக அமையும். அவ்வப்பொழுது குழந்தையை எழுப்பி பெற்றோர்கள் கழிவறைக்கு அழைத்துச்சென்று சிறுநீர் கழிக்க செய்ய வேண்டும்.

### மருத்துவ முறைகள்

சிறிய சிறுநீர்ப்பைகளை பெரிதாக்க பாதுகாப்பான மருந்துகள் இல்லை. பொதுவாக மருந்துகள் நல்லநிலையில் கொள்ளளவு சாதாரண அளவு இருந்து இரவில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளுக்கே மருந்துகள் உதவும், பயனைத்தரும். இதற்கு சிறுநீர் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்தும், சிறுநீர்ப் பையை தளர்த்தும் மருந்துகளும் தற்காலிகமாக ஓரளவு வெற்றி அளிக்கும்.

### மருத்துவமுறை தோல்வியா; மனம் தளரவேண்டாம்

ஒருமுறை மருத்துவம் வெற்றி பெற்று மீண்டும் இப்பழக்கம் ஏற்படுமாயின், மீண்டும் மருத்துவ முறைகளை தொடருதல் அவசியம். சிலசமயம் இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு எல்லா மருத்துவ முறைகளும் தோல்வியடைந்து மருத்துவருக்கும், பெற்றோருக்கும் எரிச்சலை ஏற்படுத்தும். இருப்பினும் மருத்துவத்தை தொடர்வது அவசியம். ஆனால் ம[illegible] மட்டும் தொடர்ந்து ஆண்டுக்[illegible]கில் அளிக்க சில இடர்பா[illegible]கள் குழந்தைக்கு தோன்ற வாய்ப்பு உண்டு. ஆகவே எம் மருந்தையும் தொடர்ந்து அளித்தல் கூடாது. பொதுவாக இக்குழந்தைகளுக்கு மனவளப் பயிற்சியுடன் ஊக்குவித்தல் இப்பழக்கத்திற்கான காரணத்தையும் களைவதே சிறந்த மருத்துவமாகும். □

# கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் ஓ.எல். பரீட்சைக்கு தோற்ற முடியாது

## கல்விஅமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிலுள்ள பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் அவர்களது பின்தங்கிய கல்வித்தரம் காரணமாக எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

38 தேசிய மற்றும் மாகாணமட்டத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கு இவ் அறிவித்தலை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு வழங்கியுள்ளார். பின்தங்கிய மாணவர்கள் தமது பாடங்களில் மேலதிகமான கவனஞ் செலுத்தி கற்றதன் பின்னர் தமக்குரிய பரீட்சை அடுத்தவருடம் தோற்றலாம் என்றும் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வறிவுறுத்தலை வழங்கியுள்ளார். பெரும்பாலான மாணவர்கள் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞான, தொழில்நுட்ப பாடங்களில் பின்தங்கியுள்ளமை பற்றி இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த)

# அணுவாயுதவிவகாரத்தில்
# ஐ.நா. பக்கசார்பில்லாது
# நடந்துகொள்ளவேண்டும்

## வடகொரியா வற்புறுத்தல்

(பியோங்யாங்)
வடகொரியா தனது அணுவாயுதத் திட்டம் உலக நாடுகளுக்கு அச்சுறுத் தலுக்குரியதா என்பது குறித்து தீர்மானிக்கும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப்பேரவை பக் கச்சார்பற்ற வகையில் செயற்பட வேண்டுமெனவும் அமெரிக்காவை மட்டும் திருப்திப்படச் செய்யும் வகையில் அது அமையக் கூடாதெனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

சர்வதேச சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்கும் விடயங்களில் ஐக் கியநாடுகள் சபை சரியான பாதையில் செல்கின்றதா அல்லது உல கத்தை அபாயநிலைக்கிட்டுச் செல் லும் தனிப்பட்ட ஒரு நாட்டின் அமைப் பாக மாறிவருகின்றதா என வட கொரிய வெளிவிவகார அமைச்சர் பாஹ்னாம் ஷிம்ங் கேள்வியெழுப்பி யுள்ளார்.

வடகொரியா மீண்டும் அணு வாயுதத் திட்டத்தை முன்னெடுத் துச்சென்றுள்ளதைக்கண்டிக்கும் வகையில் 15அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாதுகாப்புப்பேரவை அறிக்கையொன்றைத் தாயரிக்க முன்வந்ததையடுத்தே வடகொரியா இந்தச்சந்தேகக் கேள்வியை எழுப்பி யுள்ளது. வட கொரியாவின் அணு வாயுதத் திட்டத்தைப் பாதுகாப் புப்பேரவை கண்டிக்கவேண்டுமென அமெரிக்கா தூண்டிவருகின்ற போதிலும் சீனாவும், ரஷ்யாவும் அதனைத்தடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## பயங்கரவாத செயலுக்காக
# 2 பேர் எல்லைதாண்டி வருகை
## இந்திய அதிகாரிகள் தகவல்

(புதுடில்லி)
பாரிய பயங்கரவாதத் தாக்குத லொன்றை நடத்தும் நோக்கில் குறிப்பான கட்டளையொன்றுடன் பாகிஸ்தானிலிருந்து இரண்டு பயங் கரவாதிகள் எல்லைதாண்டி இந்தி யாவிற்குள் வந்துள்ளனர் என்று இந்திய உளவுத்துறையினர் தெரி வித்துள்ளனர்.

கடந்த ஆண்டு மே மாதம் இந் திய இராணுவவீரர்கள் 4பேரின் குடும்பத்தைச் சேர்ந்த 34 பேரை கொலைசெய்ய காலித்ஷேக் பயங்கர வாதியின் தாக்குதல் போன்று இத் தாக்குதலும் இடம்பெறலாமென உளவுத் துறையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாதிகள் மற்றும் அவர் களின் தொடர்பாளர்களின் தடயங் களின் அடிப்படையில் இத் தகவல் தொடர்பாகத் துப்புத்துலக்கப்பட்டு வருவதாக புதுடில்லி இராணுவ அதி காரியொருவர் கூறியுள்ளார். (பி-2)

## காஷ்மீர் பற்றிய
# சமரசத் திட்டம் எதுவும்
# அமெரிக்காவிடம் இல்லை

(லண்டன்)
காஷ்மீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமரசத் திட்டமெதுவும் அமெரிக்காவிடம் இல்லை. இப்பிரச் சினைக்கு இரு தரப்பினரும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகின்றது என்று ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அப்பாஸ் பட் தெரிவித் துள்ளார்.

புஷ் நிர்வாகத்தின் விசேட அழைப்பின் பேரில் ஜம்மு-கஷ்மீர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர் கொண்ட குழு, அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சக அதிகாரிகளை சந்தித்துப் பேசியது.

இது தொடர்பாக ஜே.கே.எல்.எவ். தலைவர் அப்பாஸ் பட் கூறிய தாவது,

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமரசத் திட்டம் எதுவும் அமெரிக்காவிடம் இல்லை என்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்றே அது விரும்புகின்றது. எனினும் நட்பு நாடு என்ற முறையில் அமெ ரிக்கா ஆலோசனையும் உதவியும் வழங்கத் தயாராக உள்ளது.

காஷ்மீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் காஷ்மீர் மக்களின் கருத்துக்களும் கேட்கப் படவேண்டும். ஹுரியத் மாநாட்டு அமைப்பு காஷ்மீர் மக்களின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக இருக்க முடியாது என்பதே எங்கள் கருத்து இதை அமெரிக்காவும் ஆதரிக்கிறது.

பாகிஸ்தான் வசமுள்ள முஸா:. பராபாதிலிருந்து ஸ்ரீ நகருக்கும், மிர்பூரிலிருந்து ஜம்முவுக்கும் பஸ் விட வேண்டும் என்றும் பட் யோசனை தெரிவித்தார். (பி)

## அபூர்வ மலர்



(உதகை)
படத்தில் நீங்கள் பார்ப்பது பெண்கள் பாதணி என அழைக்கப் படும் அபூர்வ ஆர்கிட் வகை மலராகும். பெண்கள் அணியும் உயரமான பாதணி போல் தோற்றமளிக்கும் இந்த ஆர்கிட் மலர்கள் மேகாலயா, நாகாலாந்து போன்ற பகுதிகளில் அதிகளவில் காணப்படுகின்றது. இந்த ஆர்கிட் மலர் உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் தற்போது உள்ளது. இந்த ஆர்கிட் மலர்கள் வருடத்திற்கு ஒருமுறை மலர்ந்து 5 மாதம் வரை வாடாமல் அப்படியே இருக்கும். (பி)

# விண்ணில் பறக்க ஆவல்
# கொண்டுள்ள ரஷ்ய பெண்

(ஸ்டார் சிட்டி)
ஒன்பது ஆண்டுகள் கடுமையான பயிற்சி பெற்ற பிறகும் கூட விண்ணுக் குச் செல்வோமா இல்லையா என்ற ஏக்கத்தில் உள்ளார் ரஷ்யாவைச் சேர்ந்த பெண் விண்வெளி வீரர் நடேஸ்தா குடேல்நயா.

ரஷ்யாவில் தற்போது உள்ள விண்வெளி வீரர்கள் குழுவில் குடேல் நயாவும் இடம்பெற்றுள்ளார்.

இக்குழுவில் சேர்வதற்காக ஆர் வமுடன் கடந்த மாதம் வந்த பெண் கள் திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் கூறினார்.

கடுமையான பணிகளை பெண் களுக்கு வழங்கக்கூடாது என்று காரணம் கூறி ஆண்கள் தங்களை ஒதுக்கப் பார்ப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

1963ல் ரஷ்ய பெண் விண்வெளி வீரர் டெரெஷ்கோவாவை விண்ணுக்கு அனுப்பி சமூக நீதி காத்தது என்று அமெரிக்காவுக்குப் பாராட்டுத் தெரிவித்தார் குடேல்நயா. (பி)

# ஒட்டிப் பிறந்தவர்கள்
# வெட்டிப் பிரிக்கப்பட்டனர்

(தாய்பெய்)
பிலிப்பைன்ஸ் நாட்டில் ஒட்டிப் பிறந்த பெண் இரட்டையர்கள் அறு வைச் சிகிச்சை மூலம் பிரித்தெடுக் கப்பட்டனர்.

கிழக்கு தாய்லாந்தில் உள்ள ஓர் மருத்துவமனையில் நடந்த 6 மணி நேர சத்திரசிகிச்சைக்குப் பின்னர் மார்பு மற்றும் வயிறு ஒட்டிப் பிறந்த பெண் குழந்தைகள் கடந்த சனிக்கிழமை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கப்பட்டனர்.

ஒரு வயதே ஆன ஆவெல் லீ கிரேஸ் பனாடாவ் மற்றும் ஆவெல் ராச்செல் பிரான்சஸ் பனாடோ இருவ ருக்கும் ஒரே கல்லீரல் தான் இருந்தது.

அறுவை சிகிச்சை வெற்றிகர மாக நடந்தது. இரத்த இழப்பு ஏற்பட வில்லை. இரத்தம் ஏற்ற வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை என்று மருத்துவமனையின் துணைக் கண் காணிப்பாளர் துஸுசி தெரிவித்தார்.

அறுவை சிகிச்சையின் போது எந்தவித சிக்கலும் ஏற்படவில்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித் தனர். (பி)

## தமிழ் நாட்டில் தண்டவாளத்தில் நாசவேலை
# தக்க நேரத்தில் கண்டுபிடித்ததால்
# பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது

(விருத்தாசலம்)
தமிழ்நாடு விருத்தாசலம் அருகே சேலம் ரயிலை கவிழ்க்க மர்ம ஆசாமிகள் மேற்கொண்டிருந்த சதி வேலை தக்க சமயத்தில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதால் மிகப் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது.

சேலம்-விருத்தாசலம் செல்லும் தண்டவாளத்தை நேற்று முன்தினம் காலை கேங்க்மேன் சரி பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது விருத் தாசலம் அருகே கொத்தனூர் என்ற இடத்தில் தண்டவாளத்தில் 3 பிஷ் பிளேட் எடுக்கப்பட்டிருப்பதும், 15 பாட்டம் கீ ஆட்டம் கண்டபடி இருப் பதும், 8 போல்டுகள், 2 போரிங் பிளேட்டுக்கள் கழற்றப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

இதனைக் கண்டு அதிர்ச்சிய டைந்த கேங்க்மேன் அருகிலுள்ள ரயில் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார். இந்த நேரத்தில் சேலத்தில் இருந்து விருத்தாசலம் செல்லும் பயணிகள் ரயில் சம்பவ இடத்தை நோக்கி வந்து கொண்டி ருந்தது. கேங்க்மேன் கொடுத்த சமிக்ஞையின்படி சேலம் ரயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்டது.

சரியான நேரத்தில் தண்டவாளத் தில் செய்யப்பட்டுள்ள நாசவேலை கண்டுபிடிக்கப்பட்டதால் நடக்க இருந்த மிகப் பெரிய விபத்து தவிர்க்கப் பட்டது. ரயிலைக் கவிழ்க்க நடந்த இந்தச் சதிவேலையில் ஈடுபட்ட மர்ம ஆசாமிகளின் முயற்சி முறிய டிக்கப்பட்டுவிட்டது.

தடை செய்யப்பட்ட தமிழர் விடு தலைப் படை இயக்கத்தினர் கட லூர் மாவட்டத்தில் அதிகம் உள்ளனர். அவர்கள் ஏதாவது சதி வேலையில் ஈடுபடலாம் என்பது கைது செய்யப்பட்ட தீவிரவாதி களிடம் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே இந்த சதி வேலையை தமிழர் விடுதலைப் படை இயக்கத்தினர் செய்திருக்க லாம் என்ற சந்தேகம் எழுந்துள் ளது. (பி)

WORLD NEWS உலக தரிசனம்

## பஸ் பள்ளத்தில் பாய்ந்தது
# 14 பயணிகள் பலியாகினர்
## கொலம்பியாவில் சம்பவம்

(போகோடா)
கொலம்பியாவின் மலைப் பிரதே சம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் சரிந்து வீழ்ந்ததில் 14 பேர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், பலர் காயமடைந் துள்ளனர்.

கொலம்பியாவில் இருந்து 220 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஷொயாற்றா எனும் இடத்திலேயே இக்கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்திற்குள்ளான பஸ்ஸின் சாரதியின் நிலை தடுமாற்றமே இச்சம்பவத்திற்குக் காரணம் என கொலம்பிய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

'இதேவேளை, இம்மலைப் பிர தேசத்தில் பஸ் விபத்துக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இதனால் பயணிகள் பலர் அச்சத் துடனேயே இவ்வீதியால் பயணத்தை மேற்கொள்வதாகவும் கொலம்பிய அதிகாரிகள் விசனம் தெரிவித்துள் ளனர். (பி-2)

# கிட்டார் கலைஞர்கள்
# கின்னஸ் சாதனை

(லண்டன்)
520 கிட்டார் வாத்திய இசைக் கலைஞர்கள் ஒன்றாக இணைந்து இசை நிகழ்ச்சிச் சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளனர்.

ஸ்கொட்லாந்தில் இந்தக் கின் னஸ் சாதனை நிகழ்ந்துள்ளது. சுமார் ஒரு மணி நேரம் இந்த 520 பேரும் ஒன்றாக இசைத்த போது லும் சில கலைஞர்கள் ராகங்களை தவறி இசைத்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது.

எனினும் சாதனைகளின் போது இவ்வாறான விடயங்கள் ஏற்படுவது சகஜம் என இந்த நிகழ்வின் ஏற் பாட்டாளரான மோனிகா வீமர் தெரிவித்துள்ளார். (பி-2)



குடிநீர்த் தட்டுப்பாட்டில் சிக்கித் தவிக்கும் சென்னை மாநகரத்திற்கு மழை வேண்டி, 5 ஜோடி கழுதைகளுக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டது. கே.கே.நகரில் நடைபெற்ற இத்திருமணத்தில் தயார் நிலையிலுள்ள இரண்டு கழுதைகள்

## இன்று ஒரு தகவல்

# பறவைகள்

நாங்கள் புதிசா ஒரு பட்டணத்துக்குப் போனால் ஒவ்வொரு இடத்துக்கும் வழி கேட்டுக்கொண்டு போவோம். விபரமெல்லாம் குறித்து பையிலே வைத்திருப்போம். இப்படியெல்லாம் செய்தும்கூடவழி தெரியாமல் புறப்பட்ட இடத்துக்கு ஓட்டோ பிடித்துக் கொண்டு வந்து சேர்வதுமுண்டு.

ஆனால் இந்தப்பறவைகள் இருக்கே அதுகளுக்கு அபாரசாமர்த்தியம் உண்டு. அதுகள் யாரிட்டையும் வழி கேட்காமலே எவ்வளவோ தூரம் பறந்து போயிடும். அதே மாதிரி திரும்பியும் வந்து விடும்.

ஆகாயவிமானங்கூட தொடர்ந்து பறக்க மாட்டாது. இடையிடையே எரிபொருள் நிரப்பித்தான் செல்லும். ஆனால் சில பறவைகளோ தொடர்ச்சியாக பல ஆயிரம் மைல்கள் பறந்து செல்லுமே. இந்தப்பறவைகளுக்கெல்லாம் கருவிகளும இல்லை. பெற்றோலும் இல்லை. அது தன்பாட்டில் போகுது வருகுது.

"ஆர்க்டிக்டென்" என்ற பறவை வெகு தூரத்திலுள்ள வட பகுதிக்குப்போகுது. என்னத்துக்கு போகுது என்று நினைக்கிறீர்கள். அங்கே போய்த் தான் முட்டை இடுகிறதாம்.

வட பகுதியிலே குளிர் காலம் தொடங்கி விட்டால் தென்பகுதிக்கடலுக்கு வந்து விடும். இதுகளெல்லாம் எந்த வேகத்திலே பறக்குதென்று நினைக்கின்றீர்கள். ஜெட் விமானத்திலும் பார்க்க வேகம் கூட பறக்கின்றனவாம்.

சில பறவைகள் தென்அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு ஐரோப்பாவிற்கு வந்து விட்டு உடனேயே தென் அமெரிக்காவிற்கு திரும்பி அதே கூட்டில் சென்று வாழுமாம்.

இன்னுமொரு சிறிய பறவை உள்ளங்கையளவு பருமன். அது இமையமலைக்கு மேல் 26ஆயிரம் அடி உயரத்தில் பறக்குமாம். கீஸ் என்று அழைக்கப்படும் இந்தப்பறவை வட துருவத்தில் வீசுகின்ற பேய் காற்றில் கூடப்பறக்குமாம்.

சரிஇறகு இருப்பதால் பறக்குது என்று வைத்துக்கொள்வம். ஆனால் எப்படி திசையெல்லாம் தெரியுது என்பது தான் கேள்வி.

ஆச்சரியமாக இருக்குதல்லே இதைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் தேனீ, டால்ஃபின் போன்றவற்றுக்கு தலையிலே "மக்னைட்" என்ற பொருள் இருக்கிறதாம். இதைக்கொண்டு தான் வடதுருவம் தென்துருவம் எல்லாம் அறிகிறதாம். சில பறவைகள் இரவிலே பறந்து போகுமாம். அதுகள் நட்சத்திரங்களைப் பார்த்து பறக்குமாம். இது சில ஆராய்ச்சியாளர்களுடைய கருத்தாகும்.

கோளரங்கம் ஒன்றை அமைத்த அறிஞர்கள் அதுக்குள் பறவைகளை பறக்கவிட்டார்களாம். ஆனால் கோள்களில் சில மாற்றங்களைச் செய்து விட்டார்கள். பறவைகள் திசை கெட்டுப்பறக்கத் தொடங்கின. அதாவது ஆபிரிக்காவிற்கு பறக்க வேண்டியவை கோள்மாறியதால் டோக்கியோவிற்கு பறந்தனவாம். இன்னொரு ஆச்சரியம் பென்குயின் பறவை 30 மைலுக்கு பாலை வனத்திலே நேர் கோடாகப் போகுமாம். எனவே மனிதனுக்கு வழி காட்டியாகவும் தபால் கொடுக்கும் தூதுவராகவும் பறவைகள் இருக்கின்றன. தபால் பட்டுவாடாவுக்கு புறாக்கள் துணை செய்கின்றன.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பேச்சுக்கள் மூலமே முரண்பாடுகள் தீர்த்துக்கொள்ளவேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்து

(யாழ்ப்பாணம்)

ஒன்று பட்டஐக்கிய இலங்கைக்குள்ளே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இதன் அடிப்படையிலேயே வடக்கு-கிழக்கிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று கண்டி அஸ்கிரிய பீடாதிபதி வணக்கத்துக்குரிய புத்திரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

உலக ஒத்துழைப்பு மன்றம் யாழ்ப்பாணம்வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்திய சமாதான செயலமர்வுக்கு கண்டி மகாநாயக்கா அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே முரண்பாடுகள் இருக்கலாம். இத்தகைய முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று கூறிய அவர் யாழ்ப்பாணத்து மக்களைச்சந்திக்க விருப்பிய போதும் அது கைகூடாதது மிகவும் கவலைஅளிக்கிறது என்று அச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இச்சமாதான செயலமர்வில் மகாநாயக்கர் நேரடியாக கலந்து கொள்ள இருந்த போதும் பாதுகாப்பு காரணங்களுக்காக அவரது விஜயம் கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்ட தென வலம்புரி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மனித உரிமை மீறல் குறித்து படையினருக்கு விளக்கம்

## பலாலி, காரைநகரில் முன்னோடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் யாழ்.குடாநாட்டில் உள்ள கடற்படை மற்றும் தரைப்படையினருக்கு மனித உரிமைகள் தொடர்பான விளக்க கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 28ஆம்திகதி தொடக்கம் நடைபெற்று வரும்இக்கருத்தரங்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி ருவான் சந்திர சேகர உட்பட கொழும்பு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த செ. திஸநாயக்க ஜெகத்லியன ஆராய்ச்சி ஆகியோர் நடத்திவருகின்றனர்.

இதன் முதற்கட்டம்28ஆம்திகதி காரைநகரில் அமைந்துள்ள கடற்படை தளத்தில்இடம்பெற்றுள்ளது.

அடுத்த கட்டம் நேற்று பலாலி படைத்தளத்தில் வைத்து சகல இராணுவ தாதிகளுக்கும் நடைபெற்றுள்ளது.

இக்கருத்தரங்கில் தற்போது குடாநாட்டில்மீறப்பட்டுவரும் மனித உரிமைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டதுடன் மனித உரிமையின் வரலாறுகள் மற்றும் மனித உரிமைகள் பேண வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-4)

## இராசி பலன்

**01.07. 2003**

**(ஆனி 17,செவ்வாய்)**

**துதியைமு.இ. 11.20 வரை**
**புனர்பூசம் பி.ப. 1.52 வரை**
**இராகுகாலம் -2.56-4.26**
**சுபநேரம்- 10.26-11.56**

**மேடம்**
கல்வியில் ஆர்வம்,தொழில் நன்மை, பயந்த சுபாவம், விரும்பாத உறவு.

**இடபம்**
இனிய அனுபவம் , கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, தனவரவு.

**மிதுனம்**
மாதர் நட்பு, பொருள் விரயம், வாக்குப் பலிதம் முயற்சி கைகூடும்.

**கடகம்**
கற்பனை மிகுதி, பெரியோர்ஆசி,சயன சுகம், தொழில் சிந்தை.

**சிங்கம்**
சுபசெலவு, மனக்கிலேசம், காரியதாமதம், தந்தை வழி உறவு.

**கன்னி**
தெய்வசிந்தை,பெருமையடைதல்,நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**துலாம்**
சுபநிகழ்ச்சி,உற்சாகம்,கீழ்படிவு,காரிய சித்தி.

**விருச்சிகம்**
உடல் உழைப்பு, வயிற்றுவலி,புதிய திட்டமிடல், அச்சமான நிலை.

**தனுசு**
வீண்தொல்லை,போசன சுகம்,ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
நினைத்த காரியம் கைகூடும்,நல்லவரவேற்பு, திடீர் பிரயாணம், தனஇலாபம்.

**கும்பம்**
பணவருவாய்,சத்துருஜெயம்,சுகவாழ்வு, காரியநன்மை.

**மீனம்**
வியாபாரவிருத்தி, காரிய இடையூறு, மனசஞ்சலம், உறவினர் சந்திப்பு .

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**-வளவன்.**

## மத்திய கிழக்கு நாடுகளில்

# பணிப்பெண்களாக பணிபுரிய தடை செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கைப்பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக அனுப்புவதை அரசாங்கம் விரைவில் தடைசெய்யவுள்ளது.

பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக அனுப்புவதால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றிவருவதை அடுத்தே அரசாங்கம் தடைவிதிக்கவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். ஆங்கிலம் மற்றும்கணனி அறிவுடைய பெண்கள் மாத்திரமே வேலை வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படுவர்.

இசபானவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (தி)

## வெளிநாடுகளில் பணிபுரியும்

# இலங்கையரின் சேமநலன்களை கண்டறிய குழு அமைப்பு

(கொழும்பு)

ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் சேம நலன்களை கண்டறியும் பொருட்டு மத குருமார் அடங்கிய குழுவொன்று கடந்த 28ஆம் திகதி இரவு கொழும்பில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் பணிப்பின் பேரிலேயே இம் மத குருமார்கள் அந்நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் அறிவித்துள்ளது.

தைப்பிரஸ்,லெபனான் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இவர்கள் அந்நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் சேமநலன்கள் குறித்து ஆராயவுள்ளனர்.

இதேவேளை,சிங்கப்பூர் ,கொரியா, மலேசியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் அங்குள்ள இலங்கையர்களின் சேம நலன்களை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என பணியகம் மேலும்தெரிவித்துள்ளது. (தி)

## வைத்தியசாலைகளில் கடமையாற்றும்

# சிற்றூழியர்கள்இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பு வைத்தியசாலைகளில் கடமையாற்றும் 5 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சிற்றூழியர்கள் இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

அத்துடன் நாளை முதல் சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக தொடர் உண்ணா விரதத்தை மேற்கொள்ள விருப்பதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

தாதி உதவியாளர் பயிற்சியை உடனடியாக ஆரம்பிப்பது,5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது,சீருடைக்கான மானியமாக 7 ஆயிரம் ரூபா வழங்குவது மற்றும் வருடாந்த படியின் தொகையை ஆயிரமாக அதிகரிப்பது, வைத்தியசாலையின் சுகாதாரசேவைகள் தனியார்மயப்படுத்துவதை இல்லாதொழிக்கவேண்டும்.

தற்போது வைத்தியசாலைகளில் பணிபுரியும் சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக்குவது என்ற ஆறு கோரிக்கைகளையும் முன் வைத்து இப்போராட்டம் காலவரையறையின்றி நடைபெறும்.

இப்போராட்டம் தொடர்பாக ஏற்கனவே தாம் சுகாதார அமைச்சர் பி.தயாரட்ணாவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் இலங்கை சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் வைத்தியர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து இரு வாரங்களுக்கும் மேலாக மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் கடந்த வாரமே முடிவுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## மானிப்பாய்,சங்கானையில்

# சின்னமுத்து தடுப்பூசி

(சுதுமலை)

மானிப்பாய்,சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இன்று முதலாம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சின்னமுத்து தடுப்பூசி 10 வயது தொடக்கம் 15 வயதுவரையான சகல பிள்ளைகளுக்கும் பாடசாலைகளில வைத்து ஏற்றப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதிகளில் 72 பாடசாலைகளைச் சேர்ந்த 13100 மாணவர்கள் வரை இத்தடுப் பூசியை பெற்றுக்கொள்ள இருப்பதாகவும் எனவே இவ்வயதுப்பிரிவு மாணவர்கள் சகலருக்கும் பாடசாலைகளில் இத்தடுப் பூசிபெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வயதுப் பிரிவைச் சேர்ந்த பாடசாலைக்குச்செல்லாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக தமது பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரை அல்லது குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரை அணுகி இத்தடுப்பு மருந்து பெற்றுக்கொள்வதற்கான திகதியை அறிந்து கொள்ளலாம்எனவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-252)

# யாழ்ப்பாணத்தில் பெற்ற அனுபவங்களை பிரி. மக்களுடன் பகிர்ந்து கொள்வேன்

## அங்கிருந்து வந்த அங்கிலிக்கன் திருச்சபை மதகுரு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் நடாத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு, தமிழ் மக்களின் ஆத்மார்த்தமான உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தியுள்ளது. இதனை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரிட்டனைச் சேர்ந்த 76 வயது நிரம்பியவரான அங்கிலிக்கன் திருச்சபையின் மதகுருவாகிய வண. பிதா ரொனி ஹோம்பர் எமது செய்தியாளரிடம் உரையாடும் போது தெரிவித்தார்.

உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் கிளையினால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இரு நாட்கள் இடம்பெற்ற சமாதானச் செயலமர்வில் பங்குகொள்ளும் பொருட்டு இம்மதகுரு யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவர் தொடர்ந்தும் எமது செய்தியாளரிடம் கருத்துக் கூறுகையில்,

நான் இப்பொழுது தான் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். ஆனால், இலங்கைக்கு ஐந்தாவது தடவையாக வந்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரு தசாப்தகால யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட அழிவுகள், சேதங்களைப் பார்வையிட்டு நான் மிகவும் மனவேதனை அடைந்துள்ளேன். யுத்தத்தின் கொடூரங்களைத் தமிழ் மக்கள் எப்படித் தாங்கினார்கள் என யோசித்துப் பார்க்கிறேன்.

நான் யாழ். மண்ணில் தங்கியிருந்த சமயம் பலதரப்பட்ட மக்களையும் சந்தித்து அவர்களது உணர்வுகள், உள்ளக்கிடக்கைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி விரிவாக கேட்டறிந்துள்ளேன். குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகத் துணைவேந்தர் போன்றவர்களைச் சந்தித்தேன்.

அத்துடன், சுண்டுக்குளியிலுள்ள சென். ஜோன்ஸ் தேவாலயத்திலும் பிரசங்கம் செய்துள்ளேன். இலங்கை அரசுக்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர வேண்டும் என நான் பெரிதும் விரும்புகின்றேன்.

இதேவேளை, நான் பிரிட்டனுக்குத் திரும்பியதும் நான் வசிக்கும் லீட்ஸ் (Leads) பகுதியில் வாழ்கின்ற எனது தேவாலய மக்களுடன் எனது யாழ்ப்பாண விஜயத்தின் போது பெற்றுக்கொண்ட பேரனுபவங்கள் பற்றிப் பகிர்ந்து கொள்வேன். விசேடமாக யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு பெரும் அனுபவத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

மேலும் இலங்கையில் நீடித்த நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும், பிரிட்டனில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ள தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா? எனக் கேட்ட சமயம், ''பிரிட்டன் அவ்வாறான முடிவை எடுக்கும்'' என நான் கருதவில்லை எனக் குறிப்பிட்டார்.(உ-77)

# மீனவர்களிடையே முரண்பாடு ஏற்பட கடல் எல்லைகளை கற்பனை நிர்ணயம் செய்யும் அரசுகளே காரணம்

## உலக மீனவர் பேரவை தமிழகப் பிரதிநிதி கருத்து

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் உள்ள மீனவர்கள் முன்னைய காலங்களில் சுதந்திரமாகவே மீன்பிடித்து வந்தார்கள். அப்பொழுது நாட்டின் எல்லைகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அப்போது மீனவர்கள் இடையே முரண்பாடுகளும் இல்லை.

ஆனால் தற்போது நாட்டின் கடல் எல்லைகளை கற்பனை மூலம் நிர்ணயித்து மீனவர்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி அவர்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்கும் அளவிற்கு இந்நாடுகளின் அரசாங்கச் சட்டங்கள் உருவாகிவிட்டன.

இவ்வாறு இலங்கையின் தென் மேற்குக் கடற்கரையோர வென்புவ நகரில் கடந்த 25ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான 5 தினங்கள் நடைபெற்ற உலக மீனவர் பேரவையின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், உலக மீனவர் பேரவையின் தமிழகப் பிரதிநிதியாக கலந்துகொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சாம்பியார் கோன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

நாட்டின் எல்லையை மீறி உள் நுழைந்து விட்டார் என்ற அர்த்தமற்ற, நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை அப்பாவி மீனவர்கள் மீது சுமத்தி, சிறையில் அடைத்து அவர்களின் வாழ்க்கையையே இருளாக்கிவிடுகின்ற இந்நிலையையும் அதனால், அவர்களின் குடும்பங்கள் படும் அவஸ்தைகளையும் நேரடியாக பார்த்தவர்கள் எவரும் அவர்களைக் கைது செய்ய முன்வர மாட்டார்கள்.

குறிப்பாக இலங்கை-இந்தியாவிற்கு இடையில் நெடுங்காலமாக இந்தப் பிரச்சினை ஏற்பட்டு வருகின்றது.

கட்டுமரங்களிலும் வள்ளங்களிலும் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள், அதாவது தமது பிழைப்பிற்காக செல்லும் சாதாரண மீனவர்களிற்கிடையே இத்தகைய பிரச்சினைகள் எதுவும் இடம்பெறுவதில்லை.

பெரும் வர்த்தகங்களுக்காக நவீன விசைப் படகுகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் மீனவர்களிடையே தான் பிரச்சினைகள் எழுகின்றன.

எனவே, இத்தகைய பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்தி எல்லா மீனவர்களும் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகளின் தலைவர்களும் ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக இலங்கை- இந்திய மீனவர்களிடையே நிலவிவரும் முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையிலும் எல்லைப்பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டும் இரு அரசினாலும் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளை வழங்கி, தொழிலைச் செய்ய அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையை நாம் சம்பந்தப்பட்ட இருநாடுகளுக்கும் விரைவில் விடுக்கவுள்ளோம் என்றார். (உ-10)

## சமய நிகழ்வுகள்

### கந்தபுராணப் படிப்பு

(பருத்தித்துறை)

அம்பன் முருகன் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது.

இதேவேளை, அடுத்த மாதம் 4ஆம் திகதி கந்த விரதப்படிப்பும் மறுநாள் திருக்கல்யாணப் படிப்பு அலங்கார உற்சவம் என்பனவும் நடைபெற்று அதிகாலை முருகப் பெருமானின் முத்துச் சப்பற வீதி வலம் இடம்பெறவுள்ளது. (உ-52)

### மடுவில் சிறப்பு திருவிழா

(யாழ்ப்பாணம்)

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத வருடாந்த உற்சவம் கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

நாளை 2ஆம் திகதி மடு மாதாவின் சிறப்பு திருவிழா இடம்பெறவுள்ளது. (க-15)

### வருடாந்த மஹோற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 12ஆம் திகதி தேர்த்தோற்சவமும் 13ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். தினமும் சைவப் புலவர் ஏ.அனுசாந்தனின் தெய்வீகச் சொற்பொழிவும் நடைபெறும். (க-79)

### மணவாளக் கோலம்

(தனங்கிளப்பு)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை மணவாளக்கோல உற்சவம் காலை 8 மணிக்கு நடைபெறும். மதியம் மகேஸ்வர பூசை நடைபெற்று அன்னதானம் நடைபெறும். மாலை 4 மணிக்கு விசேட பூசையும் அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும். (பி-37)


## தரம் 11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
**அமரர் கணபதி கணேசன்** ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு
**தொழில் முயற்சியில்கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

- கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
- புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்: ........................................
பாடசாலை முகவரி: ........................................
........................................
கற்கும் தரம்: ........................................

உறுதிப்படுத்துகிறேன்
........................
ஆசிரியர்.


# ஜனாதிபதியின் ஆலோசனையின்றி வெளிநாடுகளுக்கு செல்வது நல்லதல்ல

## ஹரீம் பீரிஸ் பிரதமருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்காமல் பிரதமர் வெளிநாடுகளுக்குச் செல்வது நல்லதல்ல.

இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் கூறியுள்ளார் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்.

இது விடயம் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த ஹரீம் மேலும் கூறுகையில்,

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டிற்கும் செல்வதற்கு முன்பும் சரி, அண்மையில் லண்டனுக்கான ராஜதந்திர விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்பும் சரி, இந்தப் பயணங்களின் நோக்கங்களைப் பற்றியோ அல்லது குறைந்த பட்சம் பயண நோக்கத்தின் சாராம்சத்தைத்தானும் ஜனாதிபதியுடன் பிரதமர் கலந்தாலோசிக்கவில்லை.

இது நல்லதல்லவெனவே நான் கருதுகின்றேன்.

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு முன், அதன் நோக்கங்கள் தொடர்பாக கலந்தாலோசிப்பது வேறு, சென்று திரும்பி வந்து விளக்கமளிப்பது வேறு.

டோக்கியோ நிதி வழங்கும் மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்பு, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் கலந்துரையாடும் கூட்டத்தை ஜனாதிபதி புறக்கணித்தமைக்கு உள்நோக்கம் எதுவும் கிடையாது.

டோக்கியோ மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்திய பின்னர் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தமையே, ஜனாதிபதியின் கலந்துரையாடல் கூட்டத்தை புறக்கணிக்கும் முடிவுக்குக் காரணமாகும் என்று குறிப்பிட்டார்.

மேலும் கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட பின்னரே பிரதமர் ஜனாதிபதிக்கு அதனை அறிவித்திருந்தார் என்றும் சுட்டிக் காட்டினார். (உ)

## வடக்கு-கிழக்கில் போரினால் பாதிப்புற்ற

# 4,421வறிய மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படுகின்ற மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 4 ஆயிரத்து 421வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கப்படவுள்ளது.

இதுபற்றி மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.யோகலிங்கம் தகவல் வெளியிடுகையில்,

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி திருகோணமலை கடற்படைத்தளத்தில் நடைபெறவுள்ள வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தின்போது மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பாடசாலைக் கல்வியைத் தொடர்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கும் திறமையான மாணவர்களுக்கான புலமைப்பரிசில் காசோலைகளை சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் கையளிக்கவுள்ளார்.

இதன்பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 24 கல்விவலயப் பாடசாலைகளில் இருந்து சுமார் 300மாணவர்களுக்கு இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஏனையவர்களான தரம்-6முதல் தரம்-11வரையிலான 2ஆயிரத்து 737 மாணவர்களுக்கும், க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் இருந்து ஆயிரத்து 384மாணவர்களுக்கும் இந்நிதிக்கான காசோலைகள் பாடசாலைகள் மூலமாக அனுப்பிவைக்கப்படும் என்றார். (உ-10)

# மத்திய கல்லூரியில் மாணவிகள் பாசறை

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மக்கள் நலன் புரிச்சங்கமும் படையணிகளும் இணைந்து நடாத்திய மாணவிகளுக்கான பயிற்சி பாசறை நிகழ்வு அண்மையில் இரு தினங்கள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்த பயிற்சிப்பாசறையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 32பாடசாலைகளைச்சேர்ந்த 374 மாணவிகள் பங்கேற்றனர்.

பாடசாலைகளிடையிலான பலவித போட்டிகள்,முதல் உதவி, வீதி ஒழுங்கு ,ஒழுக்கம், மனையியல், திசை அறிதல் போன்றனவும், வலைப்பந்து, கரம்,டாம், சதுரங்கப் போட்டிகள்,குறுந்தூர ஓட்டப்போட்டிகள் ஆகியனவும் இந் நிகழ்வில் நடைபெற்றன.

பாசறையின் இறுதிநாள் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்,யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.விக்கினேஸ்வரன், யாழ்.மாவட்டபிரதேச் செயலகங்களின் அரசாங்க அதிபர் கே. வீரபத்திரபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு மாணவிகளுக்கு வெற்றிக்கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். (உ-252)

# சிவப்பு நாடா முறையில் ஜனாதிபதிக்கு உடன்பாடில்லை

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களிலும் அமைச்சு அலுவலகங்களிலும் சிவப்பு நாடா முறைகளைத் தளர்த்த வேண்டுமென ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

உலக அபிப்ராய சர்வதேச அமைப்பு ரஷ்யத் தகவல் பாடசாலையுடன் இணைந்து நடாத்திய தகவல் தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்றுள்ள ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்களுக்கு விருது வழங்கும் வைபவம் அண்மையில் ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இவ்விதம் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துக்கூறுகையில்,

அமைச்சு அலுவலகங்களிலும் அரசாங்க அலுவலகங்களிலும் ஆதிகால சிவப்பு நாடா வழக்கங்களைக் கைக்கொள்வதை விடுத்து, புதிய தகவல் தொழில்நுட்ப முறைகளை கையாளப் பழக வேண்டும்.

இதனால் நேரத்தை பயனுள்ளதாக்கமுடியும்.அத்துடன் புதிய தகவல தொடர்பான இலத்திரனியல் முறைகளை சரளமாகப் பாவித்து வேலையைப் பழுவின்றியும் துரிதமாகவும் தெளிவாகவும் செய்வதற்கு நாம் பழக வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் மிக்கல் கார்போஷ் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். (உ)

# ஆசான் கணேசமூர்த்தி கராட்டிப் போட்டியில் முதலிடம்

(பருத்தித்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட 80 கிலோவுக்கு மேலான கராட்டிப்போட்டியில் பருத்தித்துறை இராஜாளி சோட்டோகான கராட்டி டூஇன்ரநஷனல் அசோசியேசன் கராட்டி ஆசான் ஆ. கணேசமூர்த்தி முதலாமிடத்தைப் பெற்று சாம்பியன் ஆனார்.

இக்கராட்டிப்போட்டிகள் திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அதிகாரி எஸ். விமலராஜா தலைமையில் ஸ்ரீலங்கா கராட்டிச்சம்மேளன நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றன.

80 கிலோ நிறைக்கும் 75 கிலோ நிறைக்கும் இடைப்பட்ட கராட்டிப் போட்டியில் பீ. அன்ரன் ஞானசீலன் (முனை,பருத்தித்துறை) முதலாமிடத்தையும் 50 கிலோவிற்கு கீழான கராட்டிப் போட்டியில் ஆர்.ஸ்ரீகரன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன்) இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

பருத்தித்துறை இராஜாளி சோட்டோக்கான் கராட்டி டூஇன்ரநஷனல் அசோசியேசன்கராட்டி ஆசான் கணேசமூர்த்தி 1982ஆம்ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கராட்டிப் போட்டியிலும் கடந்த மாதம் சர்வதேச ரீதியில் நடைபெற்ற கராட்டிப்போட்டியிலும் சாம்பியனாகி தங்கப்பதக்கங்களையும் பணப் பரிசில்களையும் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-52)




வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் திருகோணமலையில் நடாத்தப்பட்ட கராட்டிப் போட்டியின் 80கிலோவுக்கும் 75கிலோவுக்குமிடையிலான போட்டியில் முதலாம் இடத்தைப் பெறற கராட்டி வீரன் பீ.அன்ரன் ஞானசீகன மோதுவதையும் 75கிலோவுக்கு மேற்பட்ட போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற கராட்டி ஆசான் ஆர். கணேசமூர்த்தி, 50கிலோவுக்குக் கீழான போட்டியில இரண்டாமிடத்தைப் பெற்ற கராட்டி வீரன் ஆர். ஸ்ரீதரன் ஆகியோர் ஸ்ரீலங்கா கராட்டி சம்மேளன நடுவர்களுடன் காணபபடுகின்றனர். (படம்: பருத்தித்துறை நிருபர்)

# செய்தித் துளிகள்

## இருபாலைகிழக்கு அபிவிருத்திக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி .கஜேந்திரகுமார் அண்மையில் இருபாலை கிழக்குப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்தார். இதன் அடிப்படையில் இப்பகுதியில் உள்ள ஸ்ரீ விக்கினேஸ்வராசன சமூக நிலைய முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாவையும்,இப்பகுதியின் பொதுவேலை திட்டங்களுக்காக இரண்டு இலட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளார். (உ)

## ஆவரங்கால் பாடசாலைக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மகாஜனக்கல்லூரியின் விருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுதிட்ட நிதியில் இருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. விநாயகமூர்த்தி ஒரு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். (உ)

## இரவல் வழங்கும் பகுதி இடமாற்றம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப்பிரதேச சபையின் நெல்லியடி பொது சன நூலகத்தின் இரவல் வழங்கும் பிரிவு வாசகர் நலன் கருதி நூலகத்தின் மேல் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் எஸ். பசுபதி அறிவித்துள்ளார். (உ-52)

## இலவச கணனிப் பயிற்சி

(சில்லாலை)

மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலை மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி வகுப்பொன்றினை கடந்த வாரம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தியது

மாணவர்களுக்கு அடிப்படை கணனி கல்வி அறிவை புகட்டும்வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இவ்வாறான வகுப்புகள் நடாத்தப் படவுள்ளன.

மாதம்ஒன்றுக்கு 40 மாணவர்கள் இதன் மூலம் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் இனிவரும் காலங்களில் ஏனைய பல்வேறு பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-58)

## செய்தியாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு நிறைவு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவது குறித்த செய்தியாளர் சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு 407 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்சி பணிமனையில் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக) நடைபெறவுள்ளது.(உ)

## கல்விக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய கல்விக்கண்காட்சி இன்று காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தனராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் க.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இசிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-15)

## கூட்டம்

(சில்லாலை)

சுண்டுக்குளி சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள ஜி.ரி.சற் நிறுவனத்தின் சமூக மேம்பாட்டு காரியாலயத்தில் ,எதிர்வரும் 3ஆம்திகதி வியாழக்கிழமை காலை9 மணிக்கு அனைத்து உள்ளூர்பொது நிறுவனங்களிலும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் சமூக மேம்பாட்டாளர்கள், தொண்டர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. (உ-58)

## புதிய கட்டடத் திறப்பு விழா

(சில்லாலை)

ஜி.ரி.சற் நிறுவன உதவியுடன் சில்லாலை றோ.க.த.க பாடசாலையில் 12 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஜி.ரி.சற் நிறுவன வெளிக்களக் குழுத்தலைவர் திருவாளர் அடிவோல்கர் கலந்து கொண்டு கட்டடத்தை உத்தியோக பூர்வமாகத திறந்து வைத்தார். (க-58)

## இணுவிலில் பாதீனியம் பரவல்

(இணுவில்)

விவசாய நிலங்களுக்குப்பெரும் கேடுவிளைவிக்கும் பாதீனியம் தற்போது இணுவில், உடுவில்,மருதனார் மடம்,உரும்பிராய் போன்ற இடங்களில் பரவி வருகின்றது.

இதன் காரணமாக உற்பத்திப் பயிர்கள் பெரும் பாதிப்படைவதாக அப்பகுதிவிவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (க-96)

## மின் விளக்கு சேதம்

(இணுவில்)

காங்கேசன்துறை வீதி இணுவில் தியேட்டர் வீதிச் சந்தியில் மின்கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் வளக்கு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி இருளில்மூழ்கியிருப்பதாகவும் இரவு நேர போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமத்தை எதிர் நோக்கவேண்டியுள்ளதாகவும் கவலைதெரிவிக்கப்படுகிறது. (க.96)

## சமுர்த்தி வங்கியாளருக்கு பயிற்சி வகுப்பு

(தும்பளை)

சமுர்த்தி வங்கியாளருக்கான பயிற்சி வகுப்பு ஒன்று இன்று முதலாம் திகதி தொடக்கம் 9ஆம்திகதி வரை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தி.லியனகே, நடேசராசா, திருமதி பந்துசேனஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (பி-24,75)

## மட்டக்களப்பில் கடும் மழை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக கடும் மழை பெய்திருக்கிறது.

கடும் மழை காரணமாக வயல் நிலங்கள் வெள்ளத்தினால் நிரம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-14)

## மக்கள் பணிமனைக்கு அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் முஸ்லிம்மக்களின் மக்கள் பணிமனைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து மீள் குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து விரிவாக கேட்டறிந்ததுடன் மீள் குடியமரும்மக்களுக்கான உதவிகள் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார். (த-4)

## பேரணிஒத்திவைப்பு

(வவுனியா)

வவுனியாவில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த மூவின மக்கள் கலந்து கொள்ளும் சமாதானபேரணிகாலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## கோப்பாயில் சட்டவிரோத மண் ஏற்றல்

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் உள்ள சில ஒழுங்கைகளில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மண் ஏற்றும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

லாண்ட் மாஸ்ரரில் சென்றே மண் அகழ்வு வேலைகள் இடம்பெறுவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்குள்ளனர். (க-79)

## பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு

(தனங்கிளப்பு)

கைதடி,மட்டுவில் போன்ற பகுதிகளில் இரவு வேளைகளில் விளை நிலங்களை பன்றிகள் மிகமோசமாக அழித்து வருகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பெருமநஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கரட், கத்தரிக்காய், மரவள்ளி போன்ற பல பயிர்களை பன்றிகள் அழித்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். (பி-37)

## கொலைச்சந்தேக நபர் பிடிபட்டார்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணியின் தென்மாகாண சபை மீன் பிடி நீர்ப்பாசன விவசாயத்துறை அமைச்சர் எம்.கே. றஞ்சித்தின் கொலையில் சமபந்தப்பட்டவரென கருதப்பட்ட 5வது எதிரி நேற்று முன்தினம் பிடிபட்டார்.

விசாரணைகளின் போது இவர் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர் என்பது தெரியவந்துள்ளது.

இச்சந்தேக நபர் எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம்திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 25ஆம் திகதி சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட அமைசசர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் சி.ஐ.டி. பிரிவில் கையொப்பம் இடச் சென்ற வேளையே இவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க-15)

## 150 கணனிகள் அன்பளிப்பு

(கொழும்பு)

வணிகம், வாணிபம்,நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பேராதனை பல்கலைக்கழகத்திற்கு 150 கணனிகளை விரைவில் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

மத்திய பிரதேச அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்காவின் அழைப்பின் பேரில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த போதே அவர் இவ்வுறுதி மொழிகளை வழங்கினார். (க-13)

## மூன்றாம் ஆண்டு நிறைவு

(அளவெட்டி)

யாழ்.தேசியகல்வியியற்கல்லூரியின் 3ஆம்ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 2,4,7,9,10 ஆம் திகதிகளில பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (க-83)

## நூலகக்கண்காட்சி

(கோப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகத்தில் 1,2,3,ஆம்திகதிகளில் காலை 9.30 -பி.ப. 4.30 மணிவரை நூலகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (க-79)

## மீளக்குடியமர அனுமதி

(தனங்கிளப்பு)

கோயிலாக்கண்டிப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையில் இராணுவம் அனுமதி அளித்துள்ளது.

கோயிலாக்கண்டிப் பிரதேசத்தில் உள்ள இருபது வரையான வீடுகளில் 1999க்கு பின்னர் இராணுவம் காவலரண் அமைத்திருந்தது. ஒப்பந்தத்தின் பின்பு அங்குள்ள இராணுவகாவல் அரண்கள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள வீடுகளில் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றதை காணக்கூடியதாகவுள்ளது. (உ-37)

## சிறு விளம்பரம்

**மணமகன் தேவை**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் படித்த மணமகள்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை. ஜாதகம், போட்டோ உட்பட உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நா.கந்தையா, சோமசுந்தரம்வீதி, ஆனைக் கோட்டை. (7205)



## வரதர் - 80

- இவ்வுலக வாழ்வின் 79 ஆண்டுகளை நிறைவுசெய்து 80 ஆவது ஆண்டில் இன்று (01.07.2003) அடியெடுத்து வைத்துள்ளேன்.
- கடந்த 79 ஆண்டுகளில் நான் வளர்முகப் பாதையில் நல்ல மன நறைவோடும் சிறந்த உடல் நலத்தோடும் வாழ்வதற்கு காரணர்களாய் அமைந்த நான் கற்ற பலநல் நூல்களை ஆக்கிய வள்ளுவன் முதலான பல சான்றோர்களையும்,
- அமரர்களாகிய எனது பெற்றோர்களையும் இன்றைய நாளில் மனங் கொண்டு அவர்களுக்கு எனது வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன.
- எனது நலவாழ்வுக்கு உறுதுணையாக இருந்த - இருந்துவருகின்ற எனது சகோதரிகள், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர்மார் பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், அருமருந்தன்ன நண்பர்கள், என்னைக் கௌரவித்து அன்புகாட்டும் இலக்கிய நண்பர்கள், தொழிலக நண்பர்கள் மற்றும் எனக்கு அன்பும் ஆதரவும் செலுத்தும் அனைவருக்கும் இன்றைய நாளில் எனது இதயம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-வரதர்

சாகித்ய இரத்தினம்,
**தி.ச.வரதராசன்**
*84/3, மானிப்பாய்ச் சாலை,*
*யாழ்ப்பாணம்.*
தொ.பெ. 222 6164
**ஆனந்தா அச்சகம்,**
தொ.பே.222 2820


# மட்டக்களப்பில் நிரந்தர படைமுகாம் அமைப்பதில் பாதுகாப்பு அமைச்சு மும்முரம்

## ஆயிரக்கணக்கான குடிகள் இடம்பெயரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள இராணுவ முகாமை நிரந்தர இராணுவ முகாமாக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம், தற்போது இந்த இராணுவமுகாம் அமைந்துள்ள அரச காணி மற்றும் அரசாங்கக் கட்டடங்களை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த காலப்பகுதியில், கல்லடி கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட இந்த இராணுவ முகாமை படிப்படியாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான விடுதிகள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள அரச கூட்டுத்தாபன திணைக்களங்களுக்குச் சொந்தமான சில விடுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

இந்த இராணுவ முகாமை நிரந்தர முகாமாக அமைக்கும் முன்னோடி நடவடிக்கையாக தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான விடுதிகளின் பெறுமதியை நிர்ணயிக்குமாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையிடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

அதேநேரம், இந்தப் பகுதியில் அமைந்துள்ள காணிகள் தொடர்பான விபரங்களை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திடமிருந்து கோரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கின்ற முதலாவது நிரந்தர இராணுவ முகாம் இதுவாக இருக்கலாம் என கூறப்படுகிறது. சன நெருக்கடிமிக்க பிரதேசத்தில் இந்த நிரந்தர இராணுவ முகாம் அமைக்கப்படுமானால், அதியுயர் பாதுகாப்பு வலயம் போன்ற காரணங்களினால் அந்த சுற்றாடலில் உள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் எதிர்காலத்தில் வெளியேறவேண்டிய அச்சுறுத்தல்கள் இருக்கலாம் என மட்டக்களப்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-15)

### எலும்புக்கூடு இருந்த இடத்தில்

# மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் விசாரணைகளுக்கு நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை நெடுங்குளம் பகுதியில் மனித எலும்புக்கூடு ஒன்றும் மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா, யாழ். பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இடங்களிலுள்ள மிதிவெடிகளையும், கண்ணிவெடிகளையும் அகற்றிவிடுமாறும் நீதிபதி இ.த.விக்னராசா கண்ணிவெடி அகற்றும் பிரிவினரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

கண்ணிவெடிகள், மிதிவெடிகள அகற்றப்பட்ட பின்பு உடற் கூற்றியல நிபுணர் வைத்திய கலாநிதி ருவன் பிறவீன் உதவியுடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிசாரைப் பணித்துள்ளார்.

அரியாலை நெடுங்குளம் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோட்றெஸ்ற் குழுவினர் மனித எலும்புக்கூடு ஒன்றை மீட்டதின் பின்னணியிலேயே நீதிவான் இ.த.விக்னராசா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# நாட்டை அழிவுப் பாதைக்கு அரசு இட்டுச் செல்லாது

## அறுதியிட்டுக் கூறுகிறார் கல்வியமைச்சர்

(கொழும்பு)

அரசியல் இலாபம் தேடும் சில தீய சக்திகள் நாட்டை யுத்தப் பாதையில் இட்டுச்செல்ல முயன்று வருகின்ற போதும், அரசாங்கம் யுத்தத்தில் இறங்க மாட்டாது என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

காலி கரந்தெனியா மத்தியகல்லூரியில் கணனிப் பிரிவொன்றைத் திறந்துவைத்து உரையாற்றியபோதே கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் தற்போது வடக்கில் படைவீரர் ஒருவரும் கொல்லப்படுவதில்லை.

இந்நிலையில், சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகள் நாட்டை மீண்டும் யுத்தப் பாதைக்குக் கொண்டுசெல்ல தீவிர முயற்சியில் இறங்கியுள்ளன.

அத்துடன், அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

எது எவ்வாறிருந்தாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மீண்டும் ஓர் யுத்தத்திற்கு இணங்காது.

அத்துடன், பொருளாதார அபிவிருத்திக்கும், கல்வியை திருப்திகரமான மட்டத்தில் பேணி வருவதற்குமே அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளில் ஒரு பகுதியாகவே சகல மாவட்டங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் திறக்கப்படுகின்றன என்றார்.

(உ-10)

# பாடசாலை ஆசிரியர்களுக்கு பல்கலையில் பயிற்சி

(கொழும்பு)

பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான பல்கலைக் கழகங்கள், தேசிய கல்வி நிறுவகங்கள் ஊடாக பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவியினை உலக வங்கி வழங்கவுள்ளது.

ஆசிரியர் கல்வி, ஆசிரியர் நிலையத் திட்டங்கள் மூலமாக வழங்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி காரியவசத்தினால் வெளியிடப்பட்ட சற்றறிக்கையில் இது தொடர்பான மேலதிக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(தி)

# புதிய கூட்டணியின் முக்கிய பதவிகள் குறித்து முரண்பாடு

## இழுபறிநிலை நீடிக்கிறது

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று இறுதியாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமான ஒப்பந்தம் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேறவில்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு பரவலாக்கம் செய்வதற்கான அதிகாரங்கள் தொடர்பில் ஒருமித்த கருத்து இன்னும் ஏற்படவில்லை. அத்துடன் புதிய கூட்டணியின் தலைவர், செயலாளர் ஆகிய பதவிகள் இரண்டையும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விட்டுக் கொடுக்கத் தயாரில்லை.

புதிய கூட்டணிக்கு ஒரு தேசிய அமைப்பாளர் பதவியை உருவாக்கி அதனை ஜே.வி.பிக்கு வழங்குவதற்கு முன்வந்தபோதும் ஜே.வி.பி. அதனை நிராகரித்து விட்டது. இதற்கு முன்னைய கூட்டத்திலேயே தலைமைப் பதவியை தமக்குத் தரும்படியும் ஜனாதிபதிக்கு புதிய பதவியை உருவாக்குமாறும் ஜே.வி.பி. கேட்டிருந்தது.

இதேவேளை, வெள்ளியன்று நடந்த கூட்டத்தில் தேர்தலொன்று வரும் பட்சத்தில் ஜே.வி.பிக்கு ஒதுக்கப்படவேண்டிய ஆசனங்கள் பற்றி சுதந்திரக் கட்சியின் அனுர பண்டாரநாயக்கவுக்கும், நிமல் ஶ்ரீபாலடி சில்வாவுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. 25 ஆசனங்களை ஜே.வி.பிக்கு வழங்கலாம் என்று சில்வாவும் 30 ஆசனங்களை வழங்கலாமென்று அனுராவும் தெரிவித்தனர். சில்வா பண்டாரநாயக்கவைப் பார்த்து நீர் ஜே.வி.பிகாரரா? சுதந்திரக் கட்சிகாரரா? என்று கேட்டார். அதற்கு அனுரா சில்வாவைப் பார்த்து நீர் சுதந்திரக் கட்சிக்காரரா? ஐக்கிய தேசியக் கட்சிக்காரரா என்று சூடாகக் கேட்டார்.

இதேவேளை, இரு கட்சிகளினதும் பொதுச் செயலாளர்கள் கூட்டணி தொடர்பாக தாம் ஒரு பொது உடன்பாட்டிற்கு வந்துள்ளதாக தெரிவிக்கும் அறிக்கையொன்றை ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு ஏற்கனவே வித்திருந்தது.

### புலனாய்வுத் துறையினர் மீதான

# தாக்குதல்களை உடன்நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத் துறையினர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்களை உடனடியாக நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்என இலங்கைக் காவற்துறைப் பரிசோதகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை காவல்துறை பரிசோதகர் சங்கத் தலைவர், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டபின்னர் இவ்வாறான சம்பவங்கள் விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அவசரகால நிலையை மீண்டும் அமுல்செய்யவேண்டும்.

இச்சம்பவங்களில் விடுதலைப் புலிகள் ஈடுபடுகின்ற போதும் அதில போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்வதில்லை.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்பு 27 இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அவர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொலை செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உடனடி உத்தரவை எதிர்பார்த்திருப்பதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)


உடுவில் மகளிர் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு
**UDUVIL GIRLS' GOLLEGE**
**EXTERNAL DEGREE UNIT**
யாழ்-பேராதனை

- G.A.Q., B.A.Part I, B.A.Final, 1st in com., B.com. Part I,. B.com. Part II, B.com. Final.
- விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
- விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அலுவலகத்தில் பெறலாம்.
- விரிவுரைகள் ஆரம்பம்: 07.07.2003 பிற்பகல் 3.30 மணி
- வகுப்புகள் யாவும் வார நாட்களில் மாலை நேரத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்கட்கு:

இணைப்பாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.
Phone No:- 021-222 3300

(96370)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்

## மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் – 2003

தலைவர்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி – யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
இடம்: பிரதான மண்டபம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. கோப்பாய்.
காலம்: 2003 யூலை 02, 04, 07, 09, 10

## நினைவுப்பேருரைகள்

"எம் மண்ணின் கல்வி வளர்ச்சிக்கும் பண்பாட்டு எழுச்சிக்கும் உழைத்த எம்மவர்கள் நினைவாக..."

சான்றோர் கௌரவிப்பு
"எம்மண்ணிற்குத் தொண்டாற்றும் எம்மவர்களைக் கௌரவித்தல்"

### நிகழ்ச்சி – I

**பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை**



பொருள்: ''இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்நோக்கும் சிக்கல்கள்''
(புலம்பெயர்ந்தோர் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டது)
பேருரையாளர்: **கலாநிதி கி.விசாகரூபன்**
(முதுநிலை விரிவுரையாளர் – தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
காலம்: 02.07.2003 மாலை 4.30 மணி.

### நிகழ்ச்சி – II

**பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப்பேருரை**



பொருள்: '' ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர் ''
பேருரையாளர்: **பேராசிரியர் சபா ஜெயராசா**
(கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
காலம்: 04.07.2003 மாலை 4.30 மணி.

### நிகழ்ச்சி – III

**பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேருரை**



பொருள்: பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ''காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள்''
பேருரையாளர்: **கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா**
(முதுநிலை விரிவுரையாளர் – தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
காலம்: 07.07.2003 மாலை 4.30 மணி.

### நிகழ்ச்சி – IV

**பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை**



பொருள்: ''கல்வி மூலமாகத் தேசத்தைக் கட்டியெழுப்ப வழிகாட்டும் நவீன முகாமைத்துவப் பிரவேசங்கள்''
பேருரையாளர்: **திரு பா. தனபாலன்** M.Phil, Dip in Ed.
(உபபீடாதிபதி கல்வியும், தரமேம்பாடும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
காலம்: 09.07.2003 மாலை 4.30 மணி

### நிகழ்ச்சி – V



**சான்றோர் கௌரவிப்பு**

''எம்மண்ணில் அறப்பணிகள், பொதுப்பணிகள் ஆற்றிவரும் நல்லாசான் தன்னலங் கருதாக்கரும வீரர்''
**செஞ்சொற் செல்வர்**
**ஆறு திருமுருகன் அவர்கள்.**
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்படுவர்.
காலம்: 10.07.2003 மாலை 4.30 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

பீடாதிபதி, உபபீடாதிபதிகள், விரிவுரையாளர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள்,
முகிழ்நிலை ஆசிரியர்கள்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் சிறப்புற வாழ்த்துகிறோம்.

| பவானி ஸ்ரோர்ஸ் | ஸ்ரீ மகாவிஷ்ணு |
|---|---|
| இராச வீதி, நீர்வேலி வடக்கு. | ஸ்ரான்லி வீதி, |
| T.P:- 021-222 2371 | (C/6368) யாழ்ப்பாணம். |


# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று மூன்றாம் திருவிழா



# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### பரவைசூழ் பதிமணி பல்லவமே

| | | | |
|---|---|---|---|
| வடிவுடைத் | தளிர்க்கையால் | வளமலி | வனமெங்கும் |
| கடிகமழ் | மலர்கொய்து | கயிலயர்ப் | புரிபூசை |
| துடியிடை | யவள்செய்ய | துயர்கெட | அருள்செய்யும் |
| படிபுகழ் | பரவைசூழ் | பதிமணி | பல்லவமே |

சிவ: சண்முகவடிவேல்

### சஞ்சலங்கள் தீர்த்திடுவாய்!

முப்புரங்கள் எரித்த சிவன்
முதல்வி உமை நாகம்மை
எப்பிணியும் எம்மை யணுகா
தின்னருளைத் தந்திடுவாய்
எப்பொழுதும் உன் நாமம்
ஏத்துகின்றோம் இடர்களையச்
சப்பறத்தில் எழுந்தருளிச்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய்!

நயினைக் கவிஞர் இராகுலன்

### நிம்மதியாய் வாழ அருளிடம்மா!

அலைகடலைத் தாண்டிவந்து வேண்டுகின்றோம்
அன்னை உந்தன் புகழினையே பாடுகின்றோம்
சிலை வடிவினளாய் வீற்றிருந்து காப்பவளே! - யாவர்
சிந்தையிலும் நிறைந்திருக்கும் நயினைத் தாயே!
மலைபோலத் துயரங்கள் வந்தபோதும்
மனதினிலே உனைநினைத்து ஆறுகின்றோம்
இலை இனிமேல் துன்பம் ஈழத்தமிழர்க்கென்று
இதயங்கள் மகிழ்ந்தெங்கும் இனிமைபொங்க
நிலையான தீர்வொன்று எமக்குக் கிட்டி
நிம்மதியாய் யாம் வாழ அருள்தந்திடம்மா

மு.முத்துக்குமார்.

### ஆனிமாதத் திருநாள்

முத்துநகை பவள இதழ் மாணிக்க
ஒளி வதனம் முடிமேல் வைரம்
புத்தொளி சேர் மரகதப் பட்
டுடையாளைப் புவனமெலாம் பூத்த தாயின்
கத்துகடல் சூழ்நயினை கனன்றொளிரும்
அருட்காட்சி காண வேண்டில்
எத்தினமும் இல்லாது ஆனிமாதத்
திருநாள் ஏற்ற தாமே

சி. பரராசசிங்கம்.

### கொடுத்திடம்மா அமைதியினை

உடுக்கிடை நாயகி யுலகாழுந் தேவி நீ
தாயேயெம் தைய லுமையே
திடுக்கிட வைத்திடும் ஷெல்லோசை வெடியோசை
ஓய்ந்த வ்வேளை தனிலே
மிடுக்கான வுன்மைந்தர் சிந்திய குருதியால்
சிவந்த விப்பூமி தனிலே
கொடுத்திடம்மா வமைதி யென்றுன்னை மன்றாட
நின்றுனைத் தொழுகின்றோம் நாம்.

கவிமணி அன்னைதாசன்.

### தாயே காத்திடம்மா!

| | | | |
|---|---|---|---|
| நயினையிலே | கோயில் | கொண்ட | நாகம்மா |
| நல்வரம் | எமக்கு | நீயே | தாருமம்மா! |
| நலிந்து | தினம் | நசிந்து | போனவாழ்வு |
| நல்வாழ்வாக | நீயும் | நன்றாக | அருளம்மா! |
| தமிழர் | வாழ்வு | தலை | நிமிர |
| தரணி | யாவும் | தினம் | போற்ற |
| தத்தளித்து | தினம் | துயரத்தில் | மூச்சுளித்து |
| தவிக்கின்ற | எம்மைத் | தாயே | காத்திடம்மா! |

அஜந்தகுமார்.

**ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு**

சிவமகாலிங்கம்
(உதவிப் பணிப்பாளர் இந்து கலாசார அமைச்சு)

முறைபட சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலா அ தவர்.
- குறள்

வலம்புரி

## சமாதான எதிரிகள் ஒன்று சேர்கின்றனர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வது உறுதியாகிவிட்டது. இனப்பிரச்சினைத் தீர்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டிலும், ஜே.வி.பியின் நிலைப்பாட்டிலும் உடன்பாடு இல்லாததால் இருகட்சிகளுக்குமான கூட்டு நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வந்தது.

எனினும் எதிர்வரும் 8ஆம் திகதி இருகட்சிகளும் கூட்டுச் சேரும் ஒப்பந்தம் கைச்சாத்தாக உள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தில் கருத்து வேறுபாட்டைக் கொண்டிருந்த இருகட்சிகளும இப்போது கூட்டுச்சேர்வதில் உடன்பாடு கண்டுள்ளனர் எனில், அவர்களின் எதிர்காலத்திட்டம் என்ன? என்பது ஆய்வுக்குரியது.

அரசும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதானமுயற்சிகள் இருகட்சிகளினதும் கூட்டினால் பாதிப்படையப்போவது சர்வநிச்சயம. ஏனெனில், ஒருகாலத்தில் சமாதானத்தை விரும்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இப்போது சமாதானத்தை மறைமுகமாக எதிர்க்கிறார். அதேநேரம் நிறைவேற்று அதிகாரம் அவரிடம் இருப்பதால், அவர் எந்த ஒரு காரணத்தையும் முன்வைத்து பாராளுமன்றத்தை கலைத்து விடமுடியும். அத்தகைய அதிகாரம் உள்ள ஒருவர் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வது சமாதானத்திற்கு மட்டுமல்ல, நாட்டிற்கே பேராபத்தாகும்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் ஆயின் அதற்கு ஜனாதிபதியின் ஆதரவு மிகமிக அவசியமானதாகும். ஆனால் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கும் நிலைமையில் ஜனாதிபதி இல்லை. அதேவேளை, சமாதான முயற்சியில் ஜனாதிபதியின் ஒத்துழைப்பை பெறும் நோக்கமும் அரசுக்கு இல்லை. இதனால் சமாதானத்தின் உருவாக்கம் சிதைவடைவதாக அமையும் வாய்ப்புக்கள் உண்டு.

அரசும், விடுதலைப்புலிகளும் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமாயின் விரும்பியோ விரும்பாமலோ ஜனாதிபதியின் பங்கைப் பெற்றிருக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரை இனப்பிரச்சினையின் கடந்த கால வரலாற்றை நோக்கும்போது, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதெல்லாம் இரு பிரதான கட்சிகளில் ஏதோ ஒரு கட்சி அதனை எதிர்ப்பதாக இருந்தது. அதிலும் பெரும் பங்கை எதிர்க்கட்சியே வகித்தது.

இந்நிலையில், என்னால் தான் சமாதானம் ஏற்பட்டது என்ற செருக்கைத் தவிர்க்க இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து எங்களால் சமாதானம் ஏற்பட்டது எனக் கூறும் மனநிலையிலேயே சமாதானத்தை அடையமுடியும். அத்தகையதொரு சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே ஜே.வி.பியுடனான கூட்டுக்கு முன்னதாக சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதிக்கும் உரிய இடத்தை வழங்கி சமாதான விரோதிகள் கூட்டுச் சேர்வதை-பலமடைவதைத் தடுக்க வேண்டும்

# ஜனாதிபதியின் பங்களிப்பின்றேல் இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

## தமிழர் விடுதலை இயக்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பிரதமரிடமோ அல்லது வெளிநாடுகளுடனோ பேசிக்கொண்டிருப்பதால் பயனேற்படப் போவதில்லை.**

**ஜனாதிபதியின் பங்களிப்பையும் இதுவிடயத்தில் நாம் உணர்ந்துகொண்டால் மாத்திரமே அரசியல் தீர்வு என்கின்ற எமது கனவு நனவாகும்.**

தமிழர் விடுதலை இயக்கத்தின் அரசியல் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, மேற்படி இயக்க யாழ்மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலை இயக்கத்தின் பிரசாரச் செயலாளர் என்.விந்தன் கனகரெட்ணம், யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.திலீப் ஆகியோர் கலந்துகொண்ட இப்பத்திரிகையாளர் மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துக் கூறிய ஸ்ரீகாந்தா,

சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியின் பங்களிப்புக் குறித்து தீர்க்கதரிசனத்துடன் பலதடவைகள் நாம வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதியோ அன்றி அவரது கட்சியின் ஆதரவையோ விடுத்து அரசியல் அமைப்பைத் திருத்தவோ புதிய அரசியல் சாசனத்தை அமைக்கவோ இயலாது என்ற எமது பட்டறிவின் அடிப்படையிலேயே இவ்வாறு வலியுறுத்தினோம்.

தற்போதைய அரசியல் யாப்பின் பிரகாரம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்து ஜனாதிபதி பகிரங்கமாகவே பேசிவருகிறார்.

இடைக்கால நிர்வாகம் எங்கினற தமது நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படாத விடத்து பேச்சுவார்த்தையில் பங்கேற்பதில்லை என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக உள்ளனர்.

புலிகளின் இந்தக்கோரிக்கையை நிறைவேற்றாதுவிட்டால் சமாதானம் சாத்தியமாகாது. எனவே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நிலவுகின்ற முறுகல் நிலைக்குத் தீர்வுகண்டு சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியை இணைப்பதன் மூலம் இடைநிறுத்தபட்ட பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

எமது இந்தக் கருத்து ஜனாதிபதியை ஆதரிப்பதாக அமைந்துவிடாது இதுவே யதார்த்தம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதியின் தமிழர்களுக்கு மாறான செயற்பாடுகளை நாம் விமர்சித்து வருகின்றதை மக்கள் அறிவார்கள் என்றார்.

மேலும்சமாதானப் பேச்சுக்கு வலுவூட்டுகின்ற விதத்தில் கூட்டமைப்பினரும் ஜனாதிபதியும் கலந்து பேசவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய ஸ்ரீகாந்தா,

எந்தக் கட்சியாயினும் தமிழ் மக்களுக்கு அவை புரிந்த நயவஞ்சகத்தை நாம் மறந்துவிடலாகாது.

கடந்த 2000 ஆண்டிலே தமிழர்களிற்கு உகந்தது எனக்கூறி ஜனாதிபதி ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்த போது அது அரைகுறைத் தீர்வுத்திட்டமாயினும் தமிழர்களிற்கு நன்மையளித்து விடுமோ என்ற அச்சம் காரணமாக அதனைப் பாராளுமன்றத்தின் உள்ளேயே தீயிட்டெரித்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சிங்களக்கட்சிகள் எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். இருப்பினு பேச்சுவார்த்தை முறிவடைந்து போ மூண்டு தமிழினம் செத்து மடி க்கூடாதென்ற நல் நோக்கத்தின் அ படையிலேயே ஜனாதிபதியின் ப ளிப்பை நாம் வலிறுத்துகிறோம் ன்று தெரிவித்தார்.

மேலும் அத்துமறி இம் இனம் மீது போர் திணிக்கப்பட்டால் அதனை உரிய முறையில் ஒன்று திரண்டு எதிர்கொள்ளத் தயார் என்றும் சவால் விட்டார்.

(உ)

# மீள்குடியமர்வுக்கொடுப்பனவு வழங்கலைத்துரிதமாக்குக

## யாழ்.அரசஅதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான ஒனறிணைக்கப்பட்ட உதவித்திட்டத்தின்கீழ் 25ஆயிரம் ரூபா கொடுப்பனவுத்தொகையை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் சகல பிரதேச செயலர்களையும் பணித்துள்ளார்.

இதனடிப்படையில், ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் கிராமிய புனரமைப்பு குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் பெறப்பட்ட அறிக்கைகள், சிபார்சுகளை யாழ்.மாவட்ட அரச செயலகத்திற்கு அனுப்பும்படி அவர் பணித்துள்ளார்.

இக் கிராமிய புனரமைப்புக் குழுக்களின் மூலம் சிபார்சு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவை எதிர்வரும் யூலை மாதத்திற்குள் வழங்குவதற்கு ஏதுவாக அவர்களின் பெயர் விபரப்பட்டியலை ஒவ்வொரு பிரதேச செயலகமும் அனுப்பிவைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்.மாவட்டத்தில் இக் கொடுப்பனவுக்கு தகுதியுடைய 40 ஆயிரம் குடும்பங்களுள் இதுவரை 4500 குடும்பங்களுக்கு மட்டுமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-15)

## கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை ட்டி நாளை புதன்கிழமை நீர்வே ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற உள்ளது.

இப்போட்டியில் ஸ்ரீவிநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவோதயா விளையாட்டுக்கழகமும் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வலிகிழக்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

(த)

## கோப்பாயில் நாளை சமுதாய எழுச்சி விழா

(கோப்பாய்)

வலிகிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்தின் உள்ளூராட்சி வாரம் தொடர்பான சமுதாய எழுச்சி விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் க.வெங்கடாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி, கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், விடுதலைப்புலிகளின் வலிகிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சியாழ்வன், பிரதேசசபை நிர்வாக உத்தியோகஸ்தர் செ.குகதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இதேவேளை பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் உள்ளூராட்சி வார ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சித்த ஆயுர்வேத மருத்துவசேவை, நீர் விநியோகம் மற்றும் சூழல் பாதுகாப்புச் சேவைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் கோப்பாய் உபஅலுவலகப் பொறுப்பதிகாரி வே.இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

(இ)

## சன்றைஸ் மெடிகிளினிக் நேற்றுத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சகல வைத்திய சேவைகளையும் உளளடக்கிய சன்றைஸ் மெடிகிளினிக் நேற்றைய தினம் இல 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.ரவிராஜினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(உ)

## விசேட விமான சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பை அடுத்து இன்று பி.ப 2.30 மணிக்கு விசேட சேவையொன்றினை எக்ஸ்போ ஏவியேசன் விமான சேவை நிறுவனம் ஒழுங்குசெய்துள்ளது.

(உ)

## தினசரி தியானம்

### யோகம்

யோகம் அன்றாட வாழ்வில் இருந்து மாறுபட்ட ஏதோ ஒன்று அல்ல,மாறாக யோகமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணையுமாறு செய்தல் வேண்டும். இறைவனை எப்போதும் நினைத்திருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஒருமணி நேரம் வேலைசெய்தவுடன், அல்லது வேறு பணிகளில் ஈடுபட்டிருந்த பின்னர், ஒருசில வினாடிகளாவது, கண்களை மூடிக்கொண்டு எங்கும் பரந்திருக்கும் தேவனான கடவுளை ஆழ்ந்து சிந்தியுங்கள். அளவுகடந்த வலுவும் அமைதியும் பெறுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

## தென்மாகாண தொலைபேசி இலக்கங்கள் மாற்றம்

(கொழும்பு)

தென்மாகாணங்களில் உள்ள இரத்தினபுரி, களுத்துறை, குருநாகல், கம்பஹா, காலி,அம்பந்தோட்டை, கண்டி ஆகிய பிரதேசங்களின் தொலைபேசிஇலக்கங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுக்காற்று ஆணைககுழு அறிவித்துள்ளது.

இம்மாற்றம் கடந்த சனி முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் அதற்கமைய மேற் கூறப்பட்ட பிரதேசங்களின் தொலைபேசி இலக்கங்ளுக்கு முன்னால் 2 அல்லது என்ற இலக்கங்களை சேர்ப்பத மூலம் தற்போது பாவனையில் உள் இலக்கம் ஏழு இலக்கங்களை கொண்டதாக மாறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

.(க-10)

## மலேஷியத் தொழில் அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

மலேஷியத் தொழில் அமைச்சர் டத்தோசாமிவேல் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று செவ்வாய்க் கிழமை வரவுள்ளார்.

நான்கு நாள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர் காலியில் ஆரம்பிக்கப்படவுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதுடன் தமிழ், முஸ்லிம் அமைச்சர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

(உ-10)

## விதவைகளுக்கு வேலை வாய்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பட்டிப்பளையில் சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 25 விதவைப் பெண்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கெயர் நிறுவனத்தின் உதவியுடன் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள நெல் குற்றும் ஆலையிலேயே 25 விதவைப் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நா. கிருஷ்ண பிள்ளை நெல்குற்றும் ஆலையை நேற்று திறந்துவைத்தார்.

இதேவேளை 25 விதவைப் பெண்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

(த-14)

## இனப்பிரச்சினை...

டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையின் இன விவகாரம் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு தெரிவித்த கருத்துக்களை அவர்கள் ஆர்வமாகக் கேட்டறிந்தனர். இந்தியாவின் தலையீடு இல்லாமல் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. குறிப்பாக மனித உரிமைகள் விடயத்தில் இந்தியா அதிக கவனம் செலுத்துவது மாத்திரமல்லாமல் நேரடியாகவே இந்த விடயங்களில் தலையிட வேண்டும்.

ஏனெனில், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை இந்தியா அப்போது ஆதரித்தது. அந்த வகையில் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இந்தியாவுக்கு ஒரு வரலாற்றுக் கடமை உண்டு என்று நாம் கருதுகிறோம் என்று டக்ளஸ் தேவானந்தா தனது செவ்வியில் மேலும் தெரிவித்தார்.

(த)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கில் நீதிமன்ற தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இருவரும் நேற்றைய தினம் இரு நிரந்தர வதிவிட ஆள்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

காராளசிங்கம் சிந்துபரன், கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஆகிய இரண்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிணை அனுமதியின் பேரிலேயே பிரஸ்தாப நபர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களை விடுதலை செய்த நீதிவான் இ.த. விக்னராஜா சாட்சிகளை அச்சுறுத்தக்கூடாது எனவும், மாதத்தின் இறுதி நாளில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இரண்டு ஈ.பி.டி.பி. சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(த)

## சமாதான..

முன்தினம் லண்டன் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக கட்டமைப்பு பற்றி அரசாங்கத்தின் நகல் யோசனை விபரத்தை இன்னும் சில தினங்களுக்குள் உத்தியோகபூர்வமாக அனுப்பிவைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

## பாலாவின் தலைமையிலேயே...

சமாதான முன்னெடுப்புக்களை பாதிக்காத வகையில் அவர்கள் ஒன்றிணைந்து தீர்க்கமான முடிவுகளை எடுத்து, எமது மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், முன்னேற்றகரமான அமைதி, சமாதான முன்னெடுப்புக்கள் செல்லவும் வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் பக்கமும், தென்னிலங்கையில் உள்ள எதிர்சக்திகளின் பக்கமும் அழுத்தங்கள் பிரயோகிக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு வலியுறுத்தினோம்.

**கேள்வி:** இந்த சமாதானமுயற்சிகள் தொடர வேண்டும் என சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளை கடுமையாக வலியுறுத்தி இருக்கின்றது. ஆனால் அரசுக்கு அப்படி கொடுக்கப்படவில்லை போன்றதொரு நிலை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது இது தொடர்பாக...?

**பதில்:** நிச்சயமாக இப்படியான ஒரு கருத்து நிலைப்பாட்டினை அவர்களுக்கு நாம் தெளிவாக விளக்கி இருந்தோம். நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் மிக முக்கியமான விடயமாக இதைத்தான் எடுத்து விளக்கியிருந்தோம். விடுதலைப் புலிகள் பக்கத்தில் அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டிய தேவை இல்லை. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அவர்களின் அபிலாசைகளை புலிகள் முன்வைக்கிறார்கள். அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட, அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட தரப்பென்ற ரீதியில் தமிழ் மக்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்: தமிழ் மக்கள் சார்பாகத்தான் விடுதலைப்புலிகள் இருக்கிறார்கள். ஆகவே விடுதலைப் புலிகள் முன்வைப்பது தமிழ் மக்களின் அபிலாசைகள் அவர்களின் எதிர்கால சம்பந்தமான விடயங்களை எனவே சர்வதேச சமூகம் எம்மீது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டிய தேவையில்லை.

**கேள்வி:** சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் விலகியிருக்கும் நிலையில் நோர்வே தரப்பு, இனி இவ்வாறான சமாதான முயற்சியை முன்னெடுக்கும் எனக் கூற முடியுமா?

**பதில்:** தற்போதும் நோர்வேதான் அனுசரணையாளராக செயற்பட்டு கொண்டிருக்கிறது. அந்த வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் பேச்சுக்களை மீண்டும் முன்னேற்றகரமாக கொண்டு செல்வதாயின் நோர்வேத் தரப்பின் அனுசரணை மிகவும் முக்கியம். ஆகவே ஒருசாத்தியமான சூழ்நிலையை உருவாக்க எமது தலைமைப் பீடம் எடுத்த யதார்த்தபூர்வமான, கள நிலைமைக்கேற்ப நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை அரசாங்கமும் எடுக்கும் போதே தொடர்ந்தும் நோர்வே அனுசரணையாளராக இருக்க முடியும்.

**கேள்வி:** போர்நிறுத்த கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** கண்காணிப்புக் குழு தந்த அறிக்கையை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. எமது நிலைப்பாட்டை கண்காணிப்புக்குழுவிற்கு விரைவில் விளக்க உள்ளோம்.

**கேள்வி:** இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்போதைய நிலையில் இராணுவத்தினர் கெடுபிடிகளை அதிகரித்துள்ளனர். இது தொடர்பாக தங்கள் கருத்து என்ன?

**பதில்:** புதிதாக எழுந்த சூழல் அல்ல யுத்தநிறுத்த கால நடவடிக்கை ஏற்பட்ட காலத்தில் இருந்தே இது தொடர்கிறது. இதனால் மக்களின் இயல்பு நிலை சீர்குலைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக ஒவ்வொரு சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் சுட்டிக் காட்டி வருகிறோம். இத் தொடர்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றதே தவிர குறையவில்லை. இதனால் மக்கள் மத்தியில் விரக்தியும் வெறுப்பும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

**கேள்வி:** விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பேச்சுவார்த்தைக் குழுவில் இருந்து இராஜினாமாச் செய்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக தங்களின் கருத்து என்ன? இப் பொறுப்புக்களை தமிழ்ச் செல்வன் ஏற்றுக் கொண்டுள்ளதாக உள்ளது. அது குறித்தும் தங்களின் கருத்து என்ன?

**பதில்:** இவை சில பத்திரிகைகளின் ஊகம் ஆகும். பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தலைமை தாங்கும் பணியை தொடர்ந்தும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கொண்டு வருகிறார். இடைக்காலத்தில் சுகவீனம் ஏற்பட்டதால் தமிழீழத்திற்கு வந்து உடற்பரிசோதனைக்காக உடனே லண்டன் செல்லவேண்டி ஏற்பட்டது. தற்போது பணியை செய்யக் கூடிய நிலையில் தான் இருக்கிறார். தொடர்ந்தும் அவரே அப் பணியை மேற்கொண்டு வருகிறார்.

**கேள்வி:** முல்லைத்தீவு சம்பவத்தில் 12 போராளிகள் கைது செய்ததாக நீங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தீர்கள். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மறுத்துள்ளது. இந் நிலைப்பாடு சமாதான நிலைப்பாட்டைப் பாதிக்குமா?

**பதில்:** முல்லைத்தீவுச் சம்பவம் மக்கள் மத்தியில் ஒரு ஆத்திரம் ஊட்டுகின்ற, சினம் ஊட்டுகின்ற செயற்பாடாகவே கருதப்படுகிறது. தொடர்ந்தும் இப்படியான மிலேச்சத்தனமான அத்துமீறல்கள் சமாதான சூழ்நிலையை பாதிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதனை நோர்வேத் தரப்புக்கும் அரச தரப்புக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளோம். இப்படியான சூழ்நிலைகளில் படைத் தரப்பை கட்டுப்படுத்தி வைத்திருக்காவிட்டால் நெருக்கடி நிலைமை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

**கேள்வி:** இடைக்கால நிர்வாக சபையில் ஏதாவது நெகிழ்வுப் போக்கு காணப்படுகிறதா?

**பதில்:** இடைக்கால நிர்வாக சபை நிலைப்பாட்டில் நெகிழ்வுத் தன்மை இல்லை. அது எமது மக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் சமாதானத்தின் பயன்களை அனுபவிக்கக் கூடிய வகையில் நாம் நிலைமைகளை சீர்படுத்த வேண்டி இருந்தால் அதற்கு நிச்சயமாக இங்கு ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.

(இ)




# அருள்மிகு செல்லக் கதிர்காம கோவில்

## 2003 மகோற்சவகால ஆன்மீக சொற்பொழிவுகள்

1) 02.07.2003 புதன்கிழமை கொடியேற்ற உற்சவ நாள்
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்கள், உதவிப்பணிப்பாளர் (இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)
விடயம்:- ''குருவாய் வருவாய்''

2) 03.07.2003 வியாழக்கிழமை துணைவியூர் கேசவன்
(ஆசிரியர் வட்டு. மத்திய கல்லூரி)
விடயம்:- ''ஆறுமுகமான பொருள்''

3) 04.07.2003 வெள்ளிக்கிழமை சிவத்தமிழ் சொல்லழகர் திரு.ச.லலீசன்
(ஆசிரியர் சோமாஸ்கந்தா கல்லூரி புத்தூர்)
விடயம்:- ''ஆர்கொலோ சதுரர்''

4) 05.07.2003 சனிக்கிழமை திரு.ந.விஜயசுந்தரம்
(ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி)
விடயம்:- ''உதித்தனன் உலகமுய்ய''

5) 06.07.2003 ஞாயிற்றுக்கிழமை செல்வி சீ.மகிந்தினி
(ஆசிரியை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை நீர்வேலி)
விடயம்:- ''சமயமும் வாழ்க்கையும்''

6) 07.07.2003 திங்கட்கிழமை திரு.அ.காந்தரூபன்
(பிரதேச செயலக உத்தியோகத்தர் கோப்பாய்)
விடயம்:- ''பெரியபுராணம் காட்டும் வாழ்க்கைநெறி''

7) 08.07.2003 செவ்வாய்க்கிழமை திரு.குமரேசன் பாலசண்முகன்
(யாழ்.பல்கலைக்கழகம்)
விடயம்:- ''நம்பினோர் கெடுவதில்லை''

8) 09.07.2003 புதன்கிழமை சைவப்புலவர் திரு.ஏரம்பமூர்த்தி அனுஷாந்தன்
(ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி)
விடயம்:- ''ஆலய வழிபாடு''

9) 10.07.2003 வியாழக்கிழமை சைவப்புலவர் கந்த.சத்தியதாசன்
(ஆசிரியர் இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்)
விடயம்:- ''காவிக்கமலக்கழலுடன் சேர்த்தருள்வாய்''

10) 11.07.2003 வெள்ளிக்கிழமை சைவப்புலவர் மு.முரளிதரன்
(ஆசிரியர் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி)
விடயம்:- ''சும்மாஇரு சொல்லற''

11) 12.07.2003 சனிக்கிழமை (இரதோற்சவம்) திருமதி பா.பாலசிங்கம்
(முதன்மைஆசிரியர் சைவசமயம்,யாழ். கல்விவலயம்)
விடயம்:- ''இரதோற்சவச் சிறப்பு''

தினமும் மாலை 5மணியளவில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறும்
சிறப்பு உற்சவ நாளில் நேரங்கள் மாற்றலாகும்

அன்பர்கள் அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகன் திருவருள் பெற்றுய் வீர்களாக.

நீர்வேலி

அருள்மிகு
செல்லக்கதிர்காம தேவஸ்தானம்

(c/6371)



## வேலை வாய்ப்பு

Computer Typist

மாதச்சம்பளம் திறமைக்கு ஏற்ப
ரூபா 4000.00 இருந்து
நேர்முகத்தேர்வு
05-07-2003 சனி 9.00-12.00
நேரில் சான்றிதளுடன் வருக

சுந்தர் வெளியீடு
544,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(கோயில்வீதிச்சந்திக்கருகாமை)



## அறிவித்தல்

### எக்ஸ்போ ஏவியேஷன்

யாழ்-கொழும்பு பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பை அடுத்து இன்று பி.ப.2.30மணிக்கு விசேட விமானசேவை ஒன்றை, எமது நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. பயணிகள் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வருகை தரவும்

நேரம்:- நண்பகல் 12.00 மணி

தொடர்புகளிற்கு:-021 2223891
071 2348888
071 2349999

(c/6319)



## கண்ணீருடன்...



இசை நாடக நாட்டுக்கூத்துக் கலைஞனும் எமது மன்றத்தின் மூத்த உறுப்பினரும், செயலவை அங்கத்தவரும், நிர்வாக அலுவலகருமான

''கலைவாரிதி''

அம்புறோஸ் ஜேக்கப் (அண்டர்சன்)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்தோம். அவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்பதுடன் அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

இயக்குநர்
அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்

(இன்று பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் பூதவுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.)

(c/6372) 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.